பக்கங்கள்-16 02.தை.2022 விலை–40.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –366



## 74 வருட கால ஏமாற்று அரசியல் – நடந்தது என்ன?



## வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணா அம்மான் நான் இல்லை – சிறப்பு நேர்காணல்



## ஜனாதிபதியின் உள்ளக பொறிமுறையும் ஏமாற்று அரசியலும்



# தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவே வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும்



# 73 வருட கால ஏமாற்று அரசியல் – நடந்தது என்ன?

"இந்த அவசரகாலச் சட்டத்தின் மூலம் நாம் பிரிய வேண்டிய சந்தியை வந்தடைந்திருக்கிறோமோ?"

கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு இப்படி முன்னர் சொன்னவர் தாசி வித்தாச்சி. 58' கலவரத்தைப் பற்றி அவர் எழுதிய "அவசரகாலம் 58" (Emergency 58) என்கிற நூலிலேயே அவர் அப்படி குறிப்பிட்டார். இலங்கையில் இராணுவச் சட்டம் ஆங்கிலேயர் காலத்தில் இருந்து அவசர நிலைமைகளின் போது போடப்பட்டிருகிறது. அதுபோல அவ்வப்போது நிகழும் கலவரங்களின் போது ஊரடங்குச் சட்டம் கூட ஓரிரு நாட்கள் பிறப்பிக்கப்பட்டு நீக்கப்பட்டிருக்கிறது. வடக்கில் பல காலம் தமிழ் மக்கள் ஊரடங்குச் சட்டம் குறிப்பிட்ட நேரத்துக்கு தினசரி நீண்டகாலமாக அனுபவித்து வந்த கொடுமையும் கூட நிகழ்ந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை நசுக்கவும், ஒடுக்குமுறையை பிரயோகிக்கவும் கூட அவசரகால சட்டத்தை ஒரு சம்பிரதாயமாகவே நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். இந்த அவசரகால சட்டங்கள் அப்பாவி மக்களை பாதுகாப்பதற்குப் பதிலாக பல சந்தர்ப்பங்களில் அந்த அட்டூழியங்களில் ஈடுபட்ட படையினரையும், காடையினரையுமே பாதுகாத்திருக்கிறது என்பது பல தடவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அவசரகால சட்டமானது அரச பயங்கரவாதத்துக்கு கட்டற்ற சுதந்திரத்தை வழங்கி அவர்களின் மனித உரிமை மீறல்களுக்கு லைசன்சை வழங்கியது.

வரலாற்றில் 77 ஜே.ஆர்.அரசாங்கம் பதவியேற்ற காலத்திலிருந்து தான் 1978இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டமும் (PTA). அவசரகால சட்டமும் (Emergency regulation) மிகக் என்பவற்றையும் கூட இந்த சட்டத்தின் மூலம் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டிருக்கின்றன.

### அவசரகால சட்டத்துக்கு வயது 75

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் வெளியிட்ட முதல் வெளியீடான "அவசரகாலம் 79" (Emergency '79) என்கிற நூல் ஜே.ஆர்.அரசாங்கத்தின் இந்த இரு சட்டங்களையும் தோலுரிக்கும் நூல். இந்த சட்டங்களின் பெயரால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த மனித உரிமை மீறல் சம்பவங்களை தொகுத்தளித்தது அந்த நூல். அந்த இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக பலமாக குரல்கொடுத்து வந்த பிரபல இடதுசாரித் தலைவருமான உப்பாலி குரே நூலின் ஆசிரியர்களின் ஒருவர். அவருடன் பாதர் போல் கெஸ்பஸ் மற்றும் பி.ராஜநாயகம் ஆகியோர் அதனை எழுதி முடித்தனர். இலங்கையில் முதற் தடவையாக 1942 மார்ச் மாதம் 19அன்று அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

நடந்தது. இவ் இனக்கலவரத்தின் போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பத்தாயிரத்துக்கும் மேட்பட்ட தமிழர்கள் கொழும்பில் அகதிகளாக்கப்பட்டனர். பல தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவ் இனக் கலவரத்திற்கு அரசாங்கம் தூண்டுகோலாக இருந்தது. ஆனால் இனக் கலவரத்துக்கு காரணமாக கூறி ஜாதிக விமுக்தி பெரமுனவோடு தமிழரசுக் கட்சியையும் தடை செய்தது.

இனக் கலவரம் 27ம் திகதியே தொடங்கி விட்டிருந்த போதும் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகிய மூன்றாவது நாளே அதாவது 29ம் திகதியே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அதாவது அவசரகால சட்டம் அவசியமான நேரத்தில் போடப்படவில்லை.

1958 மே 27ம் திகதி போடப்பட்ட அவசரகாலச் சட்டம் 1959 மார்ச் 13வரை அமுலிலிருந்தது. அதன் பின்னர் பண்டாரநாயக்க செப்டெம்பர் 25ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அன்றிலிருந்து டிசெம்பர் 2ம்




சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்காக என்று கண்துடைப்புக்கு சேர்த்திருந்த "அடிப்படை உரிமைகள்" பிரிவு அவசரகால சட்டத்தின் மூலம் செல்லுபடியற்றதாக ஆக்கப்பட்டிருந்ததால் அந்த காலம் முழுவதும் அடக்குமுறைக்குள்ளான தமிழர்கள் நீதி பெற முடியவில்லை. 1976 ட்ரயல் அட் பார் வழக்கின் தீர்ப்பின் இறுதியில் அவசரகாலசட்டமும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களும் செல்லுபடியற்றவை என்று தீர்ப்பு வழங்கியதையும் இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும்.

சிறிமா அரசாங்கம் 1974ஆம் ஆண்டு "தவச" நிறுவனத்தின் "சன்", "தினபதி", "தவச", உட்பட பல தினசரி, வார, மாதாந்த நாளிதழ்களை அவசரகால சட்டத்தின் கீழ் தடை செய்தது.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 72 அரசியலமைப்பை எதிர்த்து காங்கேசன்துறை தொகுதியில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த வேளை உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாமல் 1975ஆம் ஆண்டு வரை இழுத்தடிக்க அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தியது.

1979ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி வரை இவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. இக் கால இடைவெளிக்குள் வடக்கில் நடத்தப்பட்ட போராட்டங்களை நசுக்குவதற்கும் இச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. 1977ம் ஆண்டு ஜே.ஆர் தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியமைத்தது. 1994 வரையான 17 ஆண்டு கால ஆட்சிக்குள் 11 வருடங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி நடத்தியது. வடக்கில் எழுந்த உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதக் கிளர்ச்சியாகவே பார்த்த ஜே.ஆர் அரசாங்கம் 1979 யூன் 11ம் திகதி அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியது. இவ் அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்துக்

கொடூரமாக தமிழ் மக்களை ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது. மேலும் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக எதிர்க்கட்சிகளால் "எங்களை ஆட்சியிலேற்றினால் அவசரகால சட்டத்தை நீக்குவோம்" என்கிற வாசகம் ஒரு சடங்காகவே விஞ்ஞாபனங்களில் இடம்பெற்றதையும் நாம் அறிவோம்.

### குட்டிமணியின் தீர்க்கதரிசனம்

83இல் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணியும், தங்கத்துரையும் கைது செய்யப்பட்டிருந்தபோது குட்டிமணி நீதிமன்றத்தில் இந்த சட்டம் பற்றி ஆற்றிய உரை பிரசித்தமானது.

**"நாங்கள் இனவாதிகளல்லர். சிங்களவர்களின் உரிமைகளைப் பறிக்க வந்தவர்களும் அல்லர். எங்கள் போராட்டத்திற்கு சிங்கள மக்களின் ஆதரவையும் நாடி நிற்கின்றோம். இன்று எங்களுக்கு ஏற்பட்டுள்ள கதி நாளை இலங்கையிலுள்ள ஏனையோருக்கும் ஏற்படக்கூடும். அன்றைய தினம் ஆனையிறவு வதை முகாம் அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படும். குருநகர் வதைமுகாம் குருநாகலுக்கு மாற்றப்படும். தமிழ் இளைஞர்களுக்குப் பதிலாக சிங்கள இளைஞர்கள் அதனை அனுபவிப்பார்கள்."**

இந்த அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து நிற்கும் சிங்கள ஜனநாயக சக்திகள் குட்டிமணியின் இந்த வாசகத்தை பல தடவைகள் நினைவு கூர்ந்திருக்கிறார்கள்.

வடக்கில் ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்காகவே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பல தடவைகள் கூறப்பட்டபோதும் மாறாக அந்த சட்டம் வடக்குக்கு வெளியில் அரசாங்கத்துக்கு எதிரான ஜனநாயக ரீதியில் நீதி கோரும் சாத்வீக போராட்டங்களைக் கூட அடக்க பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தொழிற்சங்கப் போராட்டங்கள், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான போராட்டங்கள், வேறு பல வேலைநிறுத்தப் போராட்டங்கள் சுதந்திரமடைவதற்கு முன்னமே அன்றைய காலனித்துவ அரசாங்கத்தின் ஆளுனரால் பிறப்பிக்கப்பட்டது இது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பான் இலங்கையைச் சுற்றிவளைக்க முயன்று கொண்டிருந்த காரணத்தைக் காட்டி கட்டாய இராணுவச் சேவைக்காகவே இந்த அவசரகால சட்ட நிலை அன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 4ம் திகதி கொழும்பிலும் ஏப்ரல் 9ம் திகதி திருக்கோணமலையிலும் ஜப்பான் குண்டுத் தாக்குதலை நடத்தியதை தொடர்ந்து இக்கட்டாய இராணுவச் சேவை அதிகம் வலியுறுத்தப்பட்டது.அதன் பின்னர் 1947 யூன் மாதம் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதனை தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவும் அன்றைய சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கபட்டது.

இவ் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி தொழிலாளர்களின் போராட்டத்தை அரசாங்கம் நசுக்கிய போது கந்தசாமி எனும் தொழிலாளி கொல்லப்பட்டார். இந்த 1947 ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 25ம் இலக்க பொது மக்கள் பாதுகாப்புச் சட்டமே பிற்காலத்தில் 1972ம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் அமைப்பிலும், 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசு அமைப்பிலும் சேர்க்கப்பட்டது. இதனை பயன்படுத்தியே 1953ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த ஹர்த்தால் போராட்டமும் அடக்கப்பட்டது. இவ் ஹர்த்தாலின் போது எட்டு நாட்கள் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் வைத்திருந்தது. ஹர்த்தாலில் 9 பேர் கொல்லப்பட்டனர். பலர் சிறையிடப்பட்டனர். பலர் படுகாயமுற்றனர். இத்தனையும் **டட்லி அரசாங்கத்தின் போது கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடந்தன.டட்லி சேனநாயக்க ஆட்சி செய்த 1825 நாட்களில் 1086 நாட்கள் அவசரகால சாட்டத்தின் கீழ் தான் ஆட்சி செய்யப்பட்டது.**

### 58 "அவசரகால" படுகொலைகள்

பண்டாரநாயக்காவின் ஆட்சியின் கீழ், 1958ம் ஆண்டு மே மாதம் இனக்கலவரம் திகதி வரை அவசரகால நிலை அமுலில் இருந்தது. மீண்டும் 1961 ஏப்ரல் 14ம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழரசு தபால் சேவையை நடாத்தியதைத் தொடர்ந்து ஏப்ரல் 17ம் திகதி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியும் அன்றே தடை செய்யப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். வட-கிழக்குப் பகுதி இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 48 மணி நேர ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது. இவ் அவசரகால சட்டம் 1963 மே தினத்தன்று வரை அமுலில் இருந்தது.

டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் கொண்டு செல்லப்பட்ட பிரச்சாரங்கள், ஊர்வலங்கள் காரணமாக 1966 ஜனவரி 8ம் திகதி அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் அது டிசம்பர் 17 வரை அமுலில் இருந்தது. அது நீடிக்கப்பட்டு 11 நாட்களுக்குள் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு அது 1969ம் ஆண்டு 17ம் திகதி வரை அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் வடக்கு கிழக்குப் பகுதியிலும் மலையகத்திலும் நடந்த தமிழர்களின் போராட்டங்கள் மோசகரமாக அடக்கப்பட அவசரகாலச் சட்டமே துணை புரிந்தது.

### சிறிமா ஆட்சி முழுதும்...

1971ம் ஆண்டு ஜே.வி.பி எழுச்சி அடைந்ததைத் தொடர்ந்து பீதியுற்ற அரசாங்கம், மார்ச் மாதம் 16ம் திகதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது. இதன் கீழ் அனுமதியின்றி பிணங்களை எரிக்கும் சட்டத்தையும் கொண்டு வந்தது. ஏப்ரல் மாதம் 5ம் திகதி அடக்கப்பட்ட இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியை 20,000க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்து அடக்கியது. அதே அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே பல ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை முகாம்களுக்கும் சிறைக் கூடங்களுக்கும் அனுப்பியது அன்றைய சிறிமாவோ அரசாங்கம். 72 அரசியலமைப்பு ஆட்சிசெய்த அந்த 5 ஆண்டுகால ஆட்சியும் அவசரகால சட்டத்தின் கீழ் தான் நடந்தது. அந்த யாப்பு கொண்டே யூலை 12ம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. 1979 டிசம்பர் 27ம் திகதி வரை அவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது.

### தமிழரை ஒடுக்க மட்டுமா?

1980ஆம் ஆண்டு யூலையில் சம்பள உயர்வு கோரி ஈடுபட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தை நசுக்குவதற்காக யூலை 16ம் திகதி போடப்பட்ட அவசரகாலநிலை ஓகஸ்ட் 15 வரை நீடித்தது. இதற்கான பிரகடனம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் மூலமே வெளியிடப்பட்டது. இதன் இன்னொரு முக்கிய அம்சம் இதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் பெரும்பாலானோரை வேலையிலிருந்து நீக்கியது. இத் தொழிலாளர்களில் சிலர் பிற்காலத்தில் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்தனர். (ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் வேலையை இழந்த இத் தொழிலாளர்களுக்கு வேலை பெற்றுத் தருவதாகவும் தேர்தல் காலத்தில் வாக்களித்திருந்த பொ.ஐ.மு ஆட்சிக்கமர்ந்ததன் பின்னர் ஏமாற்றியது.

இதே காலப்பகுதியில் வேலை நிறுத்த போராட்டங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களை அடக்குவதற்காக பிரதி பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இந்த அவசர காலசட்டத்தைப் பயன்படுத்தினார். அதே லலித் அத்துலத் முதலி பிரேமதாச ஆட்சியின் போது கட்சியிலிருந்து விலகி புது கட்சி தொடங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது அதே அவசர காலசட்டத்தின் மூலம் நைய புடைக்கப்பட்டார்.

அடுத்ததாக 1981ம் ஆண்டு யூன் 2ம் திகதி கொண்டு வரப்பட்ட அவசரகால நிலை ஒரு கிழமைக்கு நீடித்தது.

**என்.சரவணன்**

**11ஆம் பக்கம் பார்க்க...**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## அரசு ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளுமா?

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து எனதென்னிலங்கைசிங்களமக்கள்மத்தியில் பிரச்சாரம் செய்து, சிங்கள பெரும்பான்மை மக்களால் தான் இந்நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்பேன் என இனவாதப்போக்கில் சூளுரைத்து. அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமது உரிமைகளுக்காகவும், தாம் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கான நீதியான தீர்வைக்கோரிப் போராடிய விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என முத்திரைகுத்தி, அவர்களை அழித்தொழித்து இந்நாட்டினை காக்க வந்த தேவதூதர் களாக தம்மை அடையாளங்காட்டி, இன்றைய இலங்கை அரசியலில் தமக்கென ஒரு தனியிடத்தினைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் ராஜபக்சவின் புதல்வர்களில் ஒருவரான கோட்டாபய ராஜபக்ச நல்லாட்சியை முடிவுக்குக்கொணர்ந்து இன்று பதவியில் அமர்ந்திருக்கின்றார்.

இழுபறி அரசியல் செயற்பாடுகளுக்கு மத்தியில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமராக மஹிந்த ராஜபக்ச அவர்களை நியமித்ததுடன், நாட்டின் நிதியமைச்சராக இன்னொரு சகோதரர் பசில் அவர்களையும், தொடர்ச்சியாக நாமல் ராஜபக்ச அவர்களையும் அரசியல் பயணத்தில் நிறுத்தி இன்று அவரையும் அமைச்சராக்கியுள்ளார். இவ்வாறு இந்த நாட்டில் ராஜபக்ச பரம்பரையினரின் அரசியல் குடும்ப ஆட்சியாக தொடர்ந்து வருகின்றது. இந்த நிலையில் தான் மீண்டும் நாட்டிற்குள் அரசியல் ரீதியான குழப்பங்களும் திடீரென உலகமெங்கும் பரவியிருக்கின்ற கொவிட் வைரசும் அதனது திரிபுகளாலும் இலங்கையின் பொருளாதாரமும் ஆட்டங்கண்டுள்ளதால், நாட்டின் செயற்பாடுகள் முடங்கிப்போயுள்ளன. இன்று ஆட்சியிலிருக்கும் கட்சிக்குள்ளேயே குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. நாட்டில் சீனாவினது ஆதிக்கம் அதிகரித் துள்ளதாலும், அவர்களிடமே கடன்களை வாங்கிக்குவித்துள்ளதாலும், நாட்டின் உணவு உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினாலும், முறையான திட்டமிடல்கள் இன்மையாலும் மக்கள் இவ்வரசின் மீது அதிருப்தியடைந்துள்ளனர்.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் இன்றைய ஆட்சியாளர்களால் ஒன்றுமே செய்ய முடியாத அளவிற்கு போயுள்ளது. நாடு பட்டினிச்சாவினை எதிர்கொள்ளுமா என்கிற கேள்வி எழுப்பப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. டொலர் கையிருப்பில் இல்லாமையினால் இறக்குமதி செய்வதில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நீடிக்கின்றதுடன், பொருட்களின் விலை கள் விண்ணைத்தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கொவிட் தொற்றின் பின்னரான இலங்கையின் பொருளாதாரமும் அரசியலும் அதளபாதாளம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இலங்கையில் தனிநபரின் கடன்சுமை கடந்த காலங்களைவிட இன்று அதிகரித்துள்ளது. இராணுவமயமாக்கல் சர்வதேச மற்றும் உள்ளூரிலும் விமர்சனங்களை எழுப்பியுள்ளதுடன், இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். எனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் கொவிட் வைரசில் இருந்து நாட்டை பாதுகாக்கவும், இலங்கையின் பொருளாதாரத்தினை வளர்ச்சிப்பாதை நோக்கி முன்னெடுத்துச்செல்லவும், சர்வதேச நாடுகளின் அழுத்தங்களில் இருந்தும், கடன்களில் இருந்தும், தனது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ளவும், மக்களை மீளவைக்கவும் போராடவேண்டியவராக மாறியிருக்கிறார். பல கேள்விகளுக்கு விடைதெரியாமல் இன்றைய ஆட்சி பயணித்துக்கொண்டிருக்கிறது.

171

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

ஏனெனில், பெரும்பாலான மக்கள் சோவியத் அதிகாரத்துடனும் அவர்களது மதத்தின் மேலும் எதிர்மறையான உறவைக் கொண்டவர்களாக இருந்ததுடன், அவர்கள் ஆயுத எதிர்ப்பாளர்களின் பக்கத்திற்கும் சென்றனர்.

இவ்வாறான செயற்பாட்டில் லித்துவேனிய மக்கள் காட்டுச் சகோதரர்களுக்கு உதவிசெய்தனர். நிர்வாகத்தைக் கட்டிக்காப்பதற்காகவும் தமது படைப்பிரிவுகளின் பாதுகாப்பிற்காகவும் கெரில்லாக் கட்டளையாளர்கள் மேலதிக தொண்டர் கூட்டத்துடன் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுதவிர, தொடர்ச்சியாக அறிவிக்கப்படுகின்ற மன்னிப்பைப் பயன்படுத்தி, ஒரு பகுதி ஆளணியை அவர்கள் படைப்பிரிவிலிருந்து வெளியேற்றி, அவர்களைச் சட்டபூர்வமான வாழ்க்கை வாழ வகை செய்தனர். ஆனால், தேவையான நேரத்தில் தேவையான தரத்தில் அவர்களைப் பயன்படுத்தும் சாத்தியத்தையும் பேணிக்கொண்டனர்.

ஒட்டுமொத்தத்தில் எதிர்ப்பியக்க அமைப்பு மூன்று வகையினரைக் கொண்டதாகஇருந்தது.செயற்படுகின்ற சமர்ப் படைப்பிரிவுகள், சேமப்படைகள், அனுதாபிகள், மக்கள் மத்தியில் போராளிகள் பிரசித்தி பெற்றவர்களாக இருந்ததுடன், தேசிய வீரர்கள் என்ற புகழையும் பெற்றார்கள்.

அவர்கள் தொடர்ச்சியாகக் காடுகளிலேயே இருந்தார்கள். அங்கே இடைக்காலக் காப்பிடங்களில் அல்லது நன்றாக உருமறைக்கப்பட்ட, சிறப்புப் பதுங்கிடங்களில் (கொங்கிரீட் பதுங்குகுழிகள்) அவர்கள் மறைந்திருந்தார்கள். தமது படைக்கலன்களில் அவர்கள் சோவியத் மற்றும் ஜேர்மனிய ஆயுதங்களைக் கொண்டிருந்ததுடன், பழைய லித்துவேனிய இராணுவச் இராணுவச் சீருடையையும் அணிந்திருந்தார்கள்.

அவர்களுக்கு ஆதரவு தருகின்ற குடியானவர்களிடமிருந்து அல்லது கூட்டுப்பண்ணைக்குள் இருப்பவர்களிடமிருந்து பறித்தெடுத்து உணவுப் பொருட் தேவையை நிவர்த்தி செய்தார்கள்.

கிளர்ச்சியாளர்களின் சேமப்படை கணிசமானளவு மக்கள் குழுக்களைக் கொண்டிருந்தது. இக்குழுக்களும் ஆயுதங்களைக் கொண்டிருந்தன. ஆனால், இக்குழு வீடுகளில் சாதாரண மக்களைப் போன்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தது. பாரிய நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற தருணத்தில் பலத்தை அதிகரிப்பதற்காகச் செயற்படுகின்ற படைப்பிரிவுகளுடன் காலகாலத்தில் சேமப்படைகளும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

அத்துடன், எதிரிக்குப் பொய்யான தகவல்களைக் கொடுத்தல், அவனது படைகளை ஆபத்தான திசைக்கு இழுத்துச்செல்லுதல், சில வேளைகளில் தற்காப்பு போன்றவற்றிற்கும் சேமப்படைகள் பயன்படுத்தப்பட்டன.

வழக்கமாகக் கெரில்லாக்களின் அனுதாபிகள் ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுப்பதில்லை. ஆனால், அவர்கள் வேவு, தொடர்பு, விநியோகம் போன்ற முக்கிய பணிகளை நிறைவேற்றினார்கள்.

மேற்குறித்த தொடர்பு சம்பந்தமாகக் குறிப்பிடவேண்டிய விடயம் யாதெனில், மூன்று பால்டிக் குடியரசுகளிலும் தேசிய



விடுதலை அமைப்பு நாசகாரத் தகர்ப்புப் பணிக்குரிய ஜேர்மனியச் சிறப்புப் படையுடன் சேர்ந்து மேற்கொண்ட திட்டங்கள் யாவும் வேகமாகத் தோல்வி கண்டன. ஜேர்மனியச் சிறப்புப்படை 1944 ஆம் ஆண்டிலிருந்து செஞ்சேனையின் பின்புலத்திற்குச் சமர்க் குழுக்களையும் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் தீவிரமாக அனுப்பும் நடவடிக்கையில் இறங்கியது. அதாவது, செயற்கையாகக் கிளர்ச்சியமைப்பை வழிநடத்துவதற்காகவாகும்.

செயன்முறை அனுபவத்தின் பிரகாரம், சமூக அரசியல் நிலைமை இன்னமும் சுமுகமடையாத நிலைமையில், இவ்வாறான குழுக்களை உருவாக்கியமை விஞ்சிய படைபலத்தைக் கொண்ட சோவியத் இராணுவத்திற்கும் நாசகார எதிர்ப்பு அமைப்புக்கும் எதிராக ஒற்றைக்கொற்றையாக நிற்கவேண்டிய நிலைக்கு அவற்றைத் தள்ளியது. இக்குழுக்களில் பெரும்பாலானவை இலகுவாகக் கண்டுகொள்ளப்பட்டு, வேகமாக அழிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, நவம்பர் 1944இலிருந்து 1945 ஆம் ஆண்டு பெப்ரவரி நடுப்பகுதிவரை இராணுவத்தின் பின்புலத்தில் 4176 நாசகாரர்களும் ஆயுதந்தரித்த கொள்ளையர்களும் அழிக்கப்பட்டனர்.

இவர்களில் லித்துவேனியாவில் மாத்திரம் 4045 பேராகும். இவர்களுடனான சமரில் சோவியத் படை தனது தரப்பில் 177 பேரை இழந்தது (1:24 என்ற விகிதத்தில்), குறிப்பாக லித்துவேனியாவில் 151 பேரை இழந்தது. இருந்தபோதும், இந்தக் கட்டம் தடங்களை விட்டே சென்று. இது எதிர்கால எதிர்ப்பிற்கான ஒழுங்கமைக்கப்பட்ட, பொருள், சமூக உளவியல் அடிப்படையை உருவாக்க வழிசெய்துள்ளதுடன், போரின் பின் இடைவெளியின்றி உடனேயே விரிவாக எதிர்ப்பு நடவடிக்கைகள் பரவவும் வழிசமைத்துள்ளது.

முதலாவது கட்டத்தில் கிளர்ச்சியின் வளர்ச்சி, குறிப்பாக 1945 - 1947 ஆம் ஆண்டுகளில் மிகவும் கணிசமானதாக இருந்ததுடன், எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தியது. ஏதிர்ப்பியக்கத்தின் தலைமை தமது சமர்ச் சாத்தியப்பாடுகளைத் தவறாக எடைபோட்டதுடன், இடையிடையே தமது படைப்பிரிவுகளை நேரடிச் சமரிலும் இறக்கியது. இதன்போது, அவை கூடியளவு இழப்பைச் சந்தித்தன. ஆகவேதான், இரண்டாவது கட்டத்தில் போரின் தந்திரோபாயத்தில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1942 - 1952 ஆம் ஆண்டுப் பகுதிகளில் கெரில்லாக்களின் நாசகாரப் பயங்கரவாத நடவடிக்கைகளும் தமது முகாம்கள், களஞ்சியங்கள் போன்றனவற்றைத் தற்காக்கும் நடவடிக்கைகளுமே மேற்கொள்ளப்பட்டன. வேறுவகையில் சொல்வதானால் காட்டுச் சகோதரர்களின் பிரதான பணியாக ஒரேநேரத்தில் தமது இருப்பைத் தெரிவித்து,வலிமையைவெளிக்காட்டும் நடவடிக்கைகளுடனான உயிர்வாழ்தலே விளங்கியது. இறுதிக் கட்டத்தில் (1957 ஆம் ஆண்டுவரை), லித்துவேனிய எதிர்ப்பியக்கம் படிப்படியாக கொள்ளையமைப்பாக மாற்றங்கண்டதுடன், இறுதியில் அழிவை நோக்கியும் சென்றது. இந்த மூன்றாவது கட்டத்தில், ஒரேயொரு பிரதான சமர் நடவடிக்கையாகப் பயங்கரவாதமே இருந்தது. அதுவும் பிரதானமாகச் சொந்த மக்கள் மீதே, (கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துச் செயற்பட்டதற்குத் தண்டனை அழிக்கும் வகையிலும் பறிமுதல் நடவடிக்கைகளின் போதும்) மேற்கொள்ளப்பட்டது.

கணிசமானளவில் இவ்வாறான தந்திரோபாயப் பரிணாமம் மூலோபாய மட்டத்தில் எதிர்ப்பியக்கத்தினது இலக்கற்ற பழைய சுபாவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. தமது சாத்தியப்பாடுகளையும் இரண்டு உலக வல்லரசுகளின் பாரியளவிலான எதிர்ப்பினது சாத்தியத்தையும் நிதானமாக எடைபோட்ட லித்துவேனியத் தேசியவாதிகள் தமது பிரதான நம்பிக்கையாக வெளித்தரப்பின் தலையீட்டுத் தொடர்பில் கண்வைத்தனர். அவர்களது எதிர்பார்ப்பில் மண் விழுந்ததாக வார்சோ உடன்படிக்கையின் (மே 1955 ஆம் ஆண்டு) தோற்றம் அமைந்தது. ஏனெனில், இவ்வுடன்படிக்கை பூகோள எதிர்ப்பெல்லையை இன்னமும் மேற்கே கொண்டுசென்றது.

இதுதவிர, கிளர்ச்சியாளர்களின் சமர் நடவடிக்கை குறைக்கப்படவேண்டியிருந்தது அல்லது மேற்கு தலையிடும்வரை லித்துவேனியச் சமூகம் சோவியத் மயமாக்கப்படுவதைத் தடுத்துநிறுத்தவேண்டியிருந்தது. குறிப்பாக இதனாலேயே, தாக்குதல் இலக்குகளாக, சோவியத் ரசியாவின் ஏகோபித்த அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் லித்துவேனியாவை இணைக்கும் நிகழ்வில் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்ற அமைப்புக்களும் ஆட்களும் மாறினர். பிரதேசக் கட்சி மற்றும் சோவியத் பணியாளர்கள், பரப்புரையாளர்கள், கிளர்ச்சிக்காரர்கள், கூட்டுப் பண்ணை ஒழுங்கமைப்பாளர்கள், சாதாரண குடிமக்கள்...

**தொடர்வான்....**

**நெற்றிபொறியன்**

# வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணா அம்மான் நான் இல்லை – சி.சந்திரகாந்தன்(பிள்ளையான்)

**முன்னாள் முதலமைச்சர்,பாராளுமன்ற உறுப்பினர்,அபிவிருத்திக்குழு தலைவர்,தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் தலைவருமான சிவனேசன் துறை சந்திரகாந்தன்(பிள்ளையான்) அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையில் பல விடயங்கள் பற்றி பேசலாம் என நினைக்கின்றேன். குறிப்பாக உங்களுடைய சிறைச்சாலை வாழ்க்கையினுடைய அனுபவம் எப்படியிருந்தது என்பதைப் பற்றி சற்று கூறுங்கள்?**

பதில் : தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கும் தெரியும் சிறைச்சாலை என்றால் என்ன என்று. என்னைப் பொறுத்தவரையில் உலகில் சிறைச்சாலை என்பது கடினமான வாழ்க்கை அதிலும் இலங்கை சிறைச்சாலை என்பது இன்னும் கடினம். காரணம் என்னவென்றால் மிகவும் அடிமட்ட வசதிகளுடன் இயங்குகின்ற சிறைச்சாலை தான் எமது நாட்டிலே இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட சிறைச்சாலையை தவிர அடுத்து எல்லாமே பிரிட்டிஸ் காலத்தில் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளாகவே இருக்கின்றது. அந்த வகையிலே மிக நெரிசலான புழுதியும் மூட்டை பூச்சிகளும் நிறைந்த ஒரு கடுமையான தண்டனை வழுங்குகின்ற ஒரு நிலையமாக இது இருக்கின்றது. அந்த அடிப்படையில் நாங்கள் தண்டனை இல்லாமல் பயங்காரவாத தடைச்சட்டத்தின் காரணமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். அந்தடிப்படையில் சிறைச்சாலை வாழ்க்கை எல்லாரைப்போலவும் கடினமான வாழ்க்கை தான் இருந்தாலும் எங்களுடைய வாழ்க்கையில் அரசியல் ரீதியாக பலிவாங்கப்பட்டோம் என்ற அடிப்படையிலே இதிலிருந்து மீண்டு வரவேண்டும். நாம் யார் என்பதை இந்த உலகத்திற்கு சொல்ல வேண்டும் என்று பொறுமையாக இருந்து அந்த கடுமையான சூழ்நிலையை கடந்து இன்று மக்களுடைய செல்வாக்கு காரணமாக மக்களின் மீது வைத்திருந்த நம்பிக்கை காரணமாக அதிகூடிய வாக்குகளை பெற்றுவருவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக அது அமைந்திருந்தது.

**கேள்வி : நீங்கள் சிறைச்சாலையில் இருக்கின்ற பொழுது பாராளுமன்ற உறுப்பினராக உண்மையில் இலங்கையில் ஒரு வரலாற்று சான்றிதழ் இருக்கின்றது. பாராளுமன்றத்திற்கு சிறைச்சாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு நபராக அதிலும் தமிழராக இருக்கின்றீர்கள். அதிலே கிழக்கிலும் தமிழ் மக்கள் என்ற ரீதியிலும் பெருமைப்பட வேண்டிய விடயம். அந்த உணர்வை நீங்கள் எப்படி உணருகின்றீர்கள்?**

பதில் : அது நினைத்து பார்க்க முடியாத நிகழ்வான ஒரு நாள். மக்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்திய பொழுது நான் பல இடங்களில் சொல்லியிருக்கின்றேன் மக்களுக்காக பணியாற்ற வேண்டும் என்பதற்காக என்னை அர்ப்பணித்திருக்கின்றேன். இருந்தாலும் நான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட சூழலிலும் அந்த அரசாங்கத்தினுடைய வெறித்தனமான செயற்பாடுகளிலும் நான் சற்று தளர்ச்சியிலிருந்தேன். பாராளுமன்ற தேர்தலிலே எங்களுடைய மக்களின் அழிவுகளும் இளைஞர்களினுடைய உத்வேகமும் என்னை மீண்டும் இறுதிவரை உத்வேகத்துடன் உழைக்க வேண்டும் என்ற மனநிலையை கொடுத்தது. அது மட்டுமல்ல நான் ஒரு குற்றவாளியாக்கப்பட வேண்டும் இல்லை தண்டனை ஊடாக பிரச்சனைகளை முடக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய பொது எதிரிகள் கூட மக்கள் சிறப்பான செய்தியை வழங்கியிருந்தார்கள். அந்தடிப்படையில் அந்த வெற்றியை என்னுடைய வாழ்க்கையை மக்களுக்காக உறுதிப்படுத்திய ஒரு வெற்றியாக பார்க்கின்றேன்.

**கேள்வி : உங்களுடைய ஆரம்ப பயணம் என்பது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைக்கப்பட்ட ஒரு போராட்டத்தில் போராடியவர் என்ற வகையிலும் தற்பொழுது நீங்கள் அந்த ஆயுதம் ஏந்தி போராடிய எம்முடைய அந்த கனவான இலக்குக்கும், தற்பொழுது நீங்கள் பயணிக்கும் அரசியலுக்குமுள்ள வேறுபாட்டை எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : நானும் என்னுடைய மூத்த அரசியல்வாதிகளினுடைய பேச்சு காரணமாக இந்த நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தினூடாக அறிக்கையில் இழுத்துவரப்பட்டேன் நீங்கள் சொல்லதுபோல் தமிழீழம் தேசியம் வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை முழங்கினார்கள். ஆனாலும் அது தமிழர்களுக்கு தேவையான விடயமாக கருதப்பட்டாலும் அதை அடைவதற்கான விதிமுறைகளை எந்த தலைவர்களும் சரியாக திட்டமிட்டு கொடுக்கவில்லை அல்லது திட்டமிட்ட விடயங்களை அமுலாக்கவில்லை அல்லது கையிலே வந்த விடயங்களை சரியாக பறித்தெடுக்கவில்லை என பல குற்றச்சாட்டுக்களை நான் முன்வைத்திருக்கின்றேன் உண்மையும்கூட அந்த வகையில் அதில் இழுத்துவரப்பட்டவர் என்ற அடிப்படையிலே எங்களுடைய காலச்சூழல் எங்களுடைய தலைமைகளின் தீவிர தன்மை அதுபோன்று கிழக்கு மாகாண மக்களுடைய வலி வேதனை அவர்களுடைய அடக்குமுறை அவர்களுடைய பொருளாதார பிரச்சனை அவர்களின் உள்ளக விரிவு பிரச்சனைகளை வட பகுதியை மையமாக கொண்ட தலைவர்கள் சரியாக அறிந்திருக்கவில்லை. இதன் காரணமாக இயல்பாகவே கிழக்கு மாகாணத்தை பற்றுக்கொண்டவர்கள் என்ற அடிப்படையிலே கிழக்கு மாகாணத்தில் தனித்துவமான



அறிக்கையில் கூறப்பட்டோம். இன்று கிழக்கு மாகாணத்தினுடைய தனித்துவம் கிழக்கு மாகாணத்தினுடைய பாரம்பரியம் கலை கலாச்சாரம் குறிப்பாக தமிழர்களினுடைய பெரும்பான்மையை உறுதிப்படுத்தல் கல்வி பொருளாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற இலக்கோடு நிரந்தரமான ஒரு தீர்வு திட்டத்தை அவர்களுக்கே வெற்றியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற போலியில்லாமல் நியமாக செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்வதற்கு முயற்சி எடுக்கின்றேன். குறிப்பாக நீங்கள் சொன்ன மக்களை மயக்குகின்ற சில வசனங்களிலே ஒப்பிட்டதாக வடகிழக்கு நிறைந்த சுயநிர்ணய உரிமை என்ற அதிலிருந்து இன்று என்னுடைய அரசியல் கொள்கையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு இழுத்துவரப்பட்டுள்ளது. அவர் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உண்மை அதுதான். அவர்களும் இந்த மாகாணசபை மறுமை அதில் அதிகாரம் 13ஆம் திருத்தம் இதை பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வந்திருக்கின்றார்கள். ஆகவே இப்பொழுது ஒருதருக்கும் வடகிழக்கு இணைப்பு சுயநிர்ணய உரிமை என்பதனை தாண்டி 13 ஆம் திருத்தத்தின்படி பாதுகாப்போம் என்ற அடிப்படையில் சிந்திக்கின்ற சூழலிலே நாங்களும் ஒன்றாக சிந்திக்கின்றோம் இல்லையென்றால் ஒன்றாக பயணிப்போம்.

**கேள்வி : ஆயுத போராட்டத்தை ஆரம்பிக்கின்ற பொழுது நீங்கள் ஒரு பங்குதாரியாக இருக்கின்றீர்கள் த.தே கூட்டமைப்பை நீங்கள் தானே ஆரம்பித்து அனுப்பி வைத்திருக்கின்றீர்கள். அப்படியாக இருந்தால் நீங்கள் த.தே கூட்டமைப்பினுடைய ஒற்றுமையையும் இணைத்துக்கொண்டு ஏன் செல்ல முடியாது?**

பதில் : த.தே.கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் என்பது விடுதலைப் போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்த பொழுது அந்த அமைப்பால் உருவாக்கப்பட்ட அமைப்பு தான் த.தே.கூட்டமைப்பு ஆனால் 1923 ஆம் ஆண்டு சேர் பொன் இராமநாதன் போன்றவர்களுடைய காலப்பகுதியிலே தமிழீழ கருத்தால் உருவாக்கப்பட்டுவிட்டது. சிங்களவர்களுடன் இணைந்து அவர்கள் ஒன்றாக பயணித்த விளக்கால்களுக்கு கொடி பிடித்த காலங்களிலே ஏற்பட்ட தலைமைத்துவ பிரச்சனைகளிலில் இருந்தே கருத்தாடல்கள் எல்லாம் ஆரம்பித்துவிட்டது. அதன் பின்னர் வந்த 70 ஆம் ஆண்டு தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் இராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த தமிழீழ பிரகடனத்தை செய்து உச்சகட்டமாக எதிர்க்கட்சி தலைவராக வந்தார். இவ்வாறான வரலாற்றை ஒட்டி பின்னர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்குள்ளே பல மாற்றங்கள் நிகழ்ந்து பின்னர் அமைப்புகளில் வந்த போராட்டங்கள் குத்துவெட்டுக்கள் குழிபறிப்புகளை தாண்டி விடுதலைப்புலிகள் பலமான ஒரு அமைப்பாக இருந்தபொழுது ஒன்றும் செய்யமுடியாமல் அவர்களுடன் சேர்ந்து இயங்கக்கூடியவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். ஆகவே எல்லாவற்றையும் நீங்கள் ஆழமாக பார்த்தால் சில நேரம் பலப்பரீட்சைகளும் அல்லது அவர்களுக்கான வாழ்வாற்கான வழிகளைத் தான் தேடிக்கொண்டார்களே தவிர உண்மையாக நேர்மையாக அவர்கள் போராட்டத்திலும் சரி அல்லது அவர்கள் எடுத்த பாதையிலும் சரியாக இயங்கினார் என்றால் ஒருவரும் குற்றம் சொல்லிவிட முடியாது. ஆகவே எல்லாம் சந்தர்ப்பவாதமும் நிலைமைக்கு ஏற்ற சூழலை உருவாக்கினாரே தவிர தற்பொழுதும் அதைத்தான் சில அரசியல்வாதிகள் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்னுடைய அரசியல் பார்வையிலே.

**கேள்வி : பிள்ளையான் அவர்கள் அதாவது சிறையிலிருந்து வெளியில் வந்ததுமே அல்லது உங்களுடைய பாராளுமன்ற உரைக்கு செல்வதற்கு முன்னர் நீங்கள் மக்கள் மத்தியிலே ஒரு உரையாற்றுவதாக இருந்தது. அதனையும் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சமயத்திலே நீங்கள் அங்கு உங்களுடைய பேச்சிலே பிரதேசவாதத்தை மேம்படுத்தி பேசியதால் யாழ்ப்பாணிகள் அல்லது யாழ்ப்பாணத்தார் என்றவொரு வரையறையில் பேசியதால் அங்கு மக்கள் ஒரு சர்ச்சையினை தோற்றுவித்த நிலைப்பாடுகள் இருந்தது. ஏனென்றால் கடந்த காலத்தில் இதைத்தான் கருணா அம்மானும் கிழக்கிலிருந்து பலர் விரட்டியடிக்கப்பட்டு பின்னர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் மூலமாகவும் இங்கு வரப்பட்டார்கள். ஆனால் இவ்வாறான மக்களினுடைய இன ஒற்றுமை யாழ்பாணத்திலே திருமணம் முடித்தவர்கள் அல்லது இங்கு முடித்தவர்கள் இன்னும் வாழுகின்றார்கள் உங்களுக்கு அவர்களும் வாக்களித்திருக்கின்றார்கள் ஆகவே உங்களுடைய இவ்வாறான பேச்சு மக்கள் மத்தியிலே ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றதல்லவா?**

பதில் : நான் நினைக்கின்றேன் நீங்கள் சாதாரணமான ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில் பார்த்தால் யாழ்ப்பாணம் என்று சொல்வது என்னவென்று உங்களுக்கு தெரியவில்லை என்று நினைக்கின்றேன். அல்லது சாதாரண மக்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்த அனைவருக்குமாக கருத்தாக அதை எடுத்துக்கொள்ளலாம். யாழ்ப்பாண மையவாதம் இன்றும் அது இருக்கின்றது. உங்களுக்கு தெரியாமல் மறைந்திருக்கின்றது. நாங்கள் தான் தலைவர்கள் எங்களால் தான் முடிவெடுக்க முடியும் நாங்கள் தான் இதைச் செய்வோம் என்ற விடயங்கள் இன்னும் அழுத்தமாக ஒரு பகுதியிலே இருக்கின்றது. அதை உங்களால் உணர்ந்துகொள்ள முடியாவிட்டால் எங்களுடைய தமிழர்களினுடைய இலங்கை வரலாற்றில் தமிழர்களுடைய அரசியலை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்பதனை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே நான் யாழ்ப்பாணிகள் என்று சொன்னது அந்த மாவட்டத்திலே அந்த மையவாதத்தை மையப்படுத்தி மற்றவர்களை பிற்போக்குத்தனமானவர்களாகவும் பின் தங்கியவர்களாகவும் குறைந்தவர்களாகவும் மதிக்கின்ற தன்மை அவர்களால் தான் சாதிக்க முடியும் என்ற ஒரு இருமாப்பு கொண்ட சமூகத்தினரால் தான் இன்று போராட்டம் கூட நலிந்துபோனது. இது எனக்கு மட்டுமல்ல அரசியலிலே பலருக்கும் தெரிந்த விடயம். அது போன்று ஒப்பந்தம் வந்த காலப்பகுதியிலே விடுதலைப்புலிகளுக்குள் கூட மறைமுகமாக ஊடுறுவியிருந்தது. அந்த அழிவுக்கும் அதுதான் காரணம் என்பது என்னுடைய உறுதியான கருத்து.

**கேள்வி : உங்களுக்கும் கருணா அம்மான் அவர்களுக்கும் இடையில் அரசியல் ரீதியாக என்ன முரண்பாடு ஒன்றிணைந்து ஏன் பயணிக்க முடியாமல் போனது?**

பதில் : அரசியல் முரண்பாடு என்று ஒன்றும் இல்லை. அவர் என்னுடைய பழைய தளபதியாக இருந்தவர். நாங்கள் ஒன்றாக பிரிந்து வந்தோம் கிழக்கு பிரிவினைக்கு அடித்தளமிட்டவர் அவர் தான். இருந்தாலும் பின்னர் அவர் சொல்லிவந்த வார்த்தைகளின் உறுதித்தன்மையும் மக்களுடன் தொடர்ந்தும் நிற்க முடியாத சூழல் வந்தமையினால் நாங்கள் எங்களுடைய தனித்துவமான வேலைத்திட்டங்களை செய்துகொள்கின்றோம். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி என்ற ஒன்றை உருவாக்கி பதிவு செய்து நாங்கள் ஒரு பலமான சக்தியாக எழுந்து நிற்கின்றோம். அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவராக இருக்கின்றார். தற்பொழுது வேறு கட்சியிலும் போட்டியிடுகின்றார். அவர் தன்னுடைய அரசியல் பணியை செய்துகொண்டிருக்கின்றார். நான் என்னுடைய அரசியல் பணியை செய்துகொண்டிருக்கின்றேன். ஆனால் நாங்கள் இருவரும் இணைந்து ஒன்றாக பயணிக்கின்ற சூழல் ஒன்று தற்பொழுது இல்லை என்பதனை நான் உறுதியாக கூற முடியும்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# சீனாவை இலங்கையில் இருந்து வெளியேற்ற விடுதலைப்புலிகளை கையாளப்போகும் அமெரிக்கா,இந்தியா

பூகோள அரசியலினுடைய தாக்கம் மிகவும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இலங்கையை பொறுத்தவரையில் இலங்கையின் பல இடங்களிலும் இந்த சீன அரசாங்கம் குறிவைத்திருக்கின்றது. ஆகவே குறி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் பெற்றுக்கொள்வதற்கான முழுநடவடிக்கைகளையும் அவர்கள் நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுது 42 வருடங்களின் பின்னர் போர்ட்சிற்றி சம்மந்தமான விடயங்கள் அதுவரைக்கும் அதனை தனது கையகப்படுத்தி தனது புலனாய்வு கட்டமைப்புக்களை சீன அரசாங்கம் தற்பொழுது ஆரம்பித்திருக்கின்றது.

இந்தியாவிற்கு பாரியதொரு சவாலாக அல்லது இந்தியாவை மலுங்கடிக்கின்ற ஒரு விடயமாகவே தற்பொழுது அரசியல் இராஜதந்திரப்போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இதிலே கொரோனா வைரஸின் தாக்கம் ஒருபுறமிருந்தாலும் சீனா தனது வேலைகளை கச்சிதமாக காய் நகர்த்திக் கொண்டு செல்கின்றுது. இதிலே எந்தெந்த பகுதிகள் சுவீகரிக்கப்படுகின்றது சீன அரசாங்கத்தினால் சூறையாடப்படுகின்றது என்ற விபரங்கள் கூட இன்றைய காலகட்டத்திலே அறியமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் நடமாடமுடியாத சூழல் ஊடகவியலாளர்கள் குறித்த பகுதிகளுக்கு செல்லமுடியாத ஒரு சூழல் இவ்வாறெல்லாம் இருக்கின்றது. இதனை நாம் பார்க்கின்ற பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை மலுங்கடிப்பதற்கு பல நாடுகள் அதிலே மும்முரமாக கிட்டத்தட்ட 45 நாடுகள் தீவிரம் காட்டிருந்தன. அதிலும் குறிப்பாக அன்று வடக்கு கிழக்கு பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சீன அரசானது திருகோணமலை துறைமுகத்தை தங்களுடைய அபிவிருத்திக்கு தரும்படியும் திருகோணமலை துறைமுகத்தை தமது கைவசம் வைத்திருந்தால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வலுவான நாடாக நாம் திகழ முடியும் என்று பிரபாகரன் அவர்களிடம் நேரடியாக அவர்கள் பேசியபொழுது அதனை பிரபாகரன் அவர்கள் மறுத்துவிட்டார்.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திலே நீங்கள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளமுடியாது என்ற பதில் தான் அவர்களுக்கு கிடைத்தது அப்பொழுது இந்த இராஜதந்திர நகர்வை தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இருக்கும்வரை இலங்கை அரசாங்கம் கேட்டபொழுது இலங்கை அரசாங்கம் அதற்கு அந்த காலகட்ட த்திலே ஆமோதித்தது இலங்கை அரசாங்கத்திடம் சீன அரசாங்கம் கேட்ட பொழுது சீனா தற்பொழுது அதனை வலுப்படுத்திக்கொண்டு செல்கின்றது.

சீன அரசாங்கத்தை பொறுத்தவரையிலே எவ்வாறாயினும் இந்த நாட்டுக்குள் தான் காலடி எடுத்துவைக்க வேண்டும் நீங்கள் பாருங்கள் இந்த ஈழப்போர் முடிவடைந்ததன் பின்னர் சீன நாட்டினுடைய ஆக்கிரமிப்பு எப்படியெல்லாம் இந்த நாட்டுக்குள்ளே பொருளாதாரம் என்ற ரீதியிலே நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் ஒரு ஆபத்தான சூழ்நிலையை மீண்டும் தோற்றுவித்திருக்கின்றது.

ஆகவே தற்பொழுது இந்தியாவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளி னுடைய போராட்டம் மீண்டும் இலங்கையில் அவசியம் என்றவொரு நிலைப்பாடு தோற்று விக்கப்படுகின்றது. நான் நினைக்கின்றேன் கே.பியின் ஊடாகவோ கருணாம்மான், பிள்ளையான், நெடியவன் அல்லது உருத்திர குமார் மணி மாஸ்டர் இவ்வாறு பலரும் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய முன்னாள் தளபதிகள் அல்லது முன்னாள் போராளிகள் பலரும் இருக்கின்றார்கள். ஒருவேளை



அவர்களுடன் அணுகுமுறைகளை மேற் கொண்டு ரெலோ, புளட் ஈபி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களுக்கு கடந்த காலங்களிலே இந்திய அரசாங்கம் பயிற்சி வழங்கியது போன்று மீளவும் பயிற்சிகளை வழங்கி மீண்டும் இந்த நாட்டில் இரத்தஆறு ஓடுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றது.

ஆகவே கொரோனா சூழ்நிலையை பயன்படுத்தி சீனாவினுடைய இலங்கையில் கால்பதிக்கும் விவகாரம் அதாவது ஒரு நாட்டை கடன் கொடுத்து அதனை அமுலத்தி விட வேண்டும் என்பதிலே சீனா குறியாக இருந்தது. அதற்கு இலங்கை அரசாங்கம் தற்பொழுது இருக்கின்ற ஆட்சியாளர்கள் என்றவகையிலே விலைபோய்விட்டார்கள். விலைபோகும் சூழல் தற்பொழுது உருவாகி விட்டது. ஆகவே இந்த கொரோனா வைரசினுடைய காலத்திலும் எமது அரசியலை கொஞ்சம் நிதானமாக நகர்த்தவேண்டிய சூழல் உள்ளது. உள்ளுர் போர் என்பது பாரிய விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றது.

ஆனால் தமிழீழவிடுதலைப்புலிகளும் ஏனைய இயக்கங்களும் ஈழக்கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டத்தை இலங்கை தீவிலே முன்னெடுத்தார்கள். சில காட்டிக் கொடுப்புகளின் நிமித்தமும் இந்த நாடுகளின் சில தலைவீடுகள் நிமித்தமும் அந்த ஈழப் போராட்டம் தற்பொழுது மௌனிக்கப்பட்டிருக்கின்றது. அது புதுவடிவிலே தற்பொழுது உருமாறி வருவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. காரணம் ஆசிய பசுபிக் நாடுகளிலே இந்தியா ஒரு வலுவான நாடாக திகழ்கின்றது. அதனை உடைக்க வேண்டும். இந்தியாவுடன் மோதுவதற்கு சீனாவை தவிர ஆசிய பிராந்தியத்திலே எந்தவொரு நாடும் இல்லை. அனைத்து நாடுகளும் அவர்களுடன் ஒத்துப்போகின்ற நாடுகளாகத்தான் அவர்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே ஏன் இந்தியாவுடன் நேரடியாக மோத முடியாது என்ற காரணத்தினால் இலங்கையிலே இருக்கின்ற சிங்கள அரசின் ஊடாக இவ்வாறானதொரு காய்நகர்த்தலை நகர்த்தி இந்தியாவினுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் அல்லது இந்தியாவினுடைய வர்த்தகவடிவம் சம்மந்தமான விடயங்களையே கடந்த காலங்களிலே பண்டமாற்றத்தில் இருந்து இன்றுவரை யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்னரும் இந்தியாவினுடைய உதவிகளையே இந்த அராங்கம் பெற்றுக்கொண்டிருந்தது திடீரென ஈழப்போரின் இறுதிக்கட்டம் வருகின்றபொழுது ஆயுத ரீதியாகவும் சிலசில விடயங்களை சீன அரசு வழங்கியதன் ஊடாக இந்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் சார்ந்த விடயங்கள் தற்பொழுது உலக நாடுகளிலே வலுப்பெற்றிருக்கின்ற காலத்திலே பல நாடுகளிலே தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்குமாறு கோரப்பட்ட நிலையிலே பல நாடுகளும் அங்கீகரித்திருக்கின்றன. பல நாடுகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கின்ற பொழுது இந்த வடகிழக்கிலே ஒரு அரசியல் ரீதியான தீர்வு தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கின்ற வாய்ப்புக்கள் கூட உருவாக்கப்படலாம். இந்தியாவானது இலங்கையை ஒருகட்டத்திலே ஆக்கிரமித்தபொழுது தனக்கு சார்பாக விடுதலைப்புலிகள் செயற்படவில்லை என்பதற்காக அதுபோன்று அப்பொழுது இந்தியாவிற்கு எதிரான போரை போரிடவும் இலங்கை அரசாங்கம் ரணசிங்க பிரேமதாஸ இருந்த காலகட்டத்திலே தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு 5 ஆயிரம் ஆயுதங்களை AK-47 ஐ பாராளுமன்றத்திலே கொடுத்து வாகனங்களை கொடுத்து கருணாம்மான் வெளிப்படையாக தெரிவித்திருந்தார்.

ஆகவே தற்பொழுது ரஜீவ்காந்தியின் கொலையின் பின்னர் தமிழீழவிடுதலைப்புலிகள் எதிரியாகி விட்டார்கள். இனி தமிழர்களுக்கு இருந்த நல்ல சான்றிதழை இல்லாதொழிப்பதற்காக இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கமே தமிழீழவிடுதலைப்புலிகளை வைத்து செய்துவிட்டு தற்பொழுது இந்தியாவை ஒரு பரம எதிரியாக்கிவிட்டார்கள். இன்று இந்தியாவை எதிரியாக்கியதன் பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து எவ்வாறு அமெரிக்க படைகள் 20 வருடத்தின் பின்னர் வெளியேறியதோ அதேபோன்ற வெளியேற்றத்தை இலங்கையிலிருந்து இந்திய இராணுவமும் வெளியேறுகின்றது. இறுதியிலே பலி தீர்க்க வேண்டும் என்ற மனப்பாங்கிலே ஒட்டுமொத்த தமிழர்களையும் ஆயுத போராட்ட குழுக்களையும் பலி வாங்குகின்றனர். அந்த ஆயுத குழுக்களை இந்தியாவிலே தடை செய்யப்படுகின்றது. விடுதலைப்புலிகள் பயங்கரவாத தடைச்சட்டத்திலே கைதுசெய்யப்பட்டார்கள்.

ஆகவே இவ்வாறெல்லாம் நிலைமை மோசமடைந்துகொண்டு செல்கின்றது. தற்பொழுது ஆப்கானை போன்று ஆப்கான் எப்படி அமெரிக்காவை விட்டுவிட்டு தனது வெற்றியை கொண்டாடிவிட்டு சென்றதோ அந்த மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களுக்குள்ளேயே அடிபட்டு சாக வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தான் நினைத்தால் ஒரு அணுகுண்டு போட்டுகூட அதனை அழிப்பதற்கான அனைத்து திட்டங்களும் அவர்களிடம் இருக்கின்றது. இன்று கூட இந்த இலங்கைத் தீவானது அமெரிக்காவிற்கும் தேவை இந்தியாவிற்கும் தேவை இந்தியாவும் அமெரிக்காவும் ஏதோவொரு வகையில் ஒத்துப்போகும். ஆனால் சீனாவுடனல்ல.

ஆகவே இந்தகொரோனாவைரஸைபரப்பியதில் இருந்து கொரோனா வைரஸ் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டது அதை ஆரம்பித்தது யார் என்று பார்த்தால் சீன அரசாங்கம் தான். இவ் கொரோனா வைரஸை பரப்பிய சீனாவுடனேயே இலங்கை அரசு. ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ச அவர்கள் கை கோர்த்திருப்பது மிகவும் மனவேதனைக்குரிய விடயம். இன்னும் பல பிரச்சனைகள் வருவதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது. ஆகவே சீன புலனாய்வாளர்கள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த நாட்டிலே பணியாளர்களாக பணிபுரிகின்றார்கள். அம்பாந்தோட்டையிலே கொழும்பு துறைமுகத்திலும். ஆகவே இவர்களுடைய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களை வடகிழக்கிலிருந்து அவர்களுடைய ஆதிக்கத்தை குறைத்து சீனாவினுடைய அடுத்த கலாச்சாரத்தை உருவாக்கி சீனர்கள் அடுத்த பெரும்பான்மையாக சீனர்களை இந்த நாட்டில் பரப்புவதற்கான செயற்பாட்டைத் தான் இவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களாகிய நாம் முஸ்லிம் மக்களாகிய நாம் சிங்கள மக்களாகிய நாம் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும் மீண்டும் இந்த நாட்டில் ஒரு போர் உருவாகுவதற்கு நாம் இடமளிக்க கூடாது. இருந்தாலும் இந்தியா அதனை சாதகமாக பயன்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அனைத்து கட்டமைப்புக்களையும் வளர்த்துக்கொண்டு வருகின்றது. அனைத்து கட்டமைப்புக்களையும் வளர்த்துக்கொண்டு வருகின்றது. வடகிழக்கு என்றவொரு தமிழர் தாயகம் அமைய ப்பெறுமாக இருந்தால் மட்டுமே அது இந்தியாவிற்கு தொடர்ந்தும் ஒரு பாதுகாப்பாக அமையும்.

சுழியோடி

# ஜனாதிபதியின் உள்ளக பொறிமுறையும், ஏமாற்று அரசியலும்

ஐக்கிய நாடுகள் சபையின் 79வது கூட்டத்தொடர் வெகு சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில் இம்முறையாவது பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு ஓர் தீர்வு கிடைக்காதா என்ற ஏக்க நிலையில் தாயக தமிழினமும், புலம்பெயர் தமிழினமும் எதிர்பார்த்து நின்றிருந்தது. கடந்த 78வது கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46% பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்தது. இதை ஐரோப்பிய பாராளுமன்றம் கவனத்தில் எடுத்து இலங்கை அரசானது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் வரை ஜி.எஸ்பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை அரசுக்கு வழங்குவதை தடை செய்வதை பரிசீலனை செய்ய தீர்மானித்துள்ளது. இந்நிலையில் இவ்வாறு ஜி.எஸ்பி.பிளஸ் வரிச்சலுகை தடை செய்யப்படுமாயின் அது இலங்கை பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடி நிலையை கண்டிப்பாக தோற்றுவிக்கும் ஏற்கனவே இலங்கை பொருளாதாரம் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மிகுந்த நெருக்கடியில் உள்ள நிலையில் இவ்வாறு வரிச்சலுகைகளும் நிறுத்தப்படுமாயின் மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.



இது இவ்வாறு இருக்க இம்முறை இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையினுடைய கூட்டத்தொடரில் இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். அங்கு அவர் தெரிவித்த கருத்தானது தமிழர்களுக்கான தீர்வு விடயத்தையோ அல்லது அவர்களுக்கான நீதியை வழங்குவதைப்பற்றியோ எவ்வித விடயங்களும் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் **"பழைய குருடி கதவை திறவடி"** என்ற நிலைப்பாட்டில் உள்ளக பொறிமுறையூடாக பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்றும் அத்துடன் புலம்பெயர் அமைப்புக்களையும் புலம்பெயர் மக்களையும் பேச்சுக்கு அழைத்துள்ளமையானது சர்வதேசத்தை முற்றாக ஏமாற்றுவதாக அமைகின்றது. சரிபிழைக்கு அப்பால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இங்குள்ள நிலையில் புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவது என்பது நகைப்புக்குரிய விடயமாகும். இதில் புலம்பெயர் அமைப்புக்களையோ அல்லது புலம்பெயர் எமது உறவுகளையோ இதில் குற்றம் சொல்லவோ அல்லது இழிவுபடுத்தவோ வரவில்லை. உண்மையில் தாயகத்தில் உள்ளவர்களுடன் பேச வேண்டும் பொறுப்புக்கூறல் யுத்தக் குற்றங்கள் நல்லிணக்க பொறிமுறை என்பனவற்றை ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் தீர்வை காணவேண்டுமே வழிய தனியே உள்ளக பொறிமுறையூடாக விசாரணையை மேற்கொள்ளுவதென்பது கொலைகாரன் கையில் நீதியை எதிர்பார்ப்பதற்கு சமன் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்து இன்றுடன் 12 வருடங்கள் ஆகின்ற நிலையில் இன்று வரை தமிழர்களுக்கான எதுவித தீர்வுகளும் கிடைக்கவில்லை. காணாமல் போனோர் போராட்டங்கள் காலவரையில் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. காணாமல் போனோரை தேடும் பணியில் ஈடுபடும் உறவுகள் காணாமல் போனோரை கண்டடைவதற்குள் மரணித்து போய்விடுவார்கள். திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழர் தேசத்தில் பௌத்த விகாரைகள் தொடர் இராணுவ அடக்குமுறைகள் தமது உறவுகளைக்கூட நினைவுகூற முடியாத ஓர் இழிநிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது. தமிழ் மக்கள் ஒன்றை இவ்விடத்தில் புரிந்துகொள்ள வேண்டும். எமது தமிழ் தலைமைகள் கூறுவதைபோல் வெளிநாட்டு மத்தியஸ்துடன் நல்லிணக்க பொறிமுறை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றினை நிலைநிறுத்துமாறு கோருவதானது முட்டாள்தனமானது. ஏனெனில் ஆயுதப்போராட்டம் இடம்பெற்ற காலம்தொட்டு பல மத்தியஸ்துடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் நோர்வேயின் மத்தியஸ்துடனான பேச்சுவார்த்தை வரை பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று அவ் மத்தியஸ்தின் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் இலங்கை அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி வெற்றி கண்டதே கண்கூடு உண்மையில் இறுதி யுத்தத்தில் எமது மக்களின் அழிவுக்கு தனியே சிங்கள அரசோ அல்லது அந்நேரம் ஆட்சியில் இருந்தவர்கள் மட்டும் காரணமல்ல உலக வல்லரசுகளாக உலாவரும் நாடுகள் அனைத்தும் கூட்டுசேர்ந்து கொட்டமடித்ததே அந்த இறுதி யுத்த அழிவு இவ்வாறு இறுதி யுத்த அழிவுக்கு துணை நின்றவர்களிடம் நாம் நீதி கோரிநிற்பதில் பயனில்லை. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக பொலிஸ்காரன் என தன்னை வரித்து நிற்கும் அமெரிக்காவின் ஆலோசனை கூடமோ அமெரிக்காவின் தாளத்திற்கு ஏற்ப நடனமாடும் சபையே ஐ.நா சபை இலங்கைக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் இவ் ஐ.நா மன்றில் இடம்பெறாது என்பதே உண்மை அத்துடன் சீனா என்னும் பலம்பொருந்திய வல்லரசின் பிடிக்குள் இலங்கை உள்ளது. சீனாவை மீறி எந்தவொரு வல்லரசும் இலங்கையை தொடமுடியாது என்பது வெளிச்சமான உண்மை.

ஆகவே உலக வல்லரசான அமெரிக்கா உதவும், பிரித்தானியா உதவும், ரஷ்யா உதவும் என கற்பனை செய்திருக்க முடியாது. இவ்விடயத்தில் ஓர் தீர்க்க தரிசன உண்மையை கூற வேண்டும். 1987ஆம் ஆண்டு தியாகி திலீபன் அவர்கள் அன்றுள்ள நிலையை பார்த்து இந்திய இராணுவம் எம்மை இரட்சிக்க வந்துள்ளது என தமிழ் மக்கள் மனம் குளிர்ந்த நிலையில் உண்ணாவிரதம் ஆரம்பிக்க முன்னர் அவர் பேசிய பேச்சில் ஓர் வரி இன்னும் பொருந்தும். அன்று அவர் பேசியது யாதெனில் **இன்று தமிழர்கள் தம்முடைய அழிநிலையை புரிந்துகொள்ள முடியாமல் உள்ளார்கள். அவர்கள் ஓர் தெளிவற்ற நிலையில் உள்ளார்கள் இன்று உள்ள நிலையை தமிழர்கள் புரிந்துகொள்ள முடியாமல் போனால் நாளை எமது வரலாறு பரிதாபத்துக்குரியதாக மாறும் எனக் கூறினார்.** ஆம் நாம் இன்று பரிதாபத்துக்குரியவர்களாக உள்ளோம். எமக்கான தீர்வை பெற்றுத்தருவார்கள் என தமிழர்கள் தற்பொழுது வரை நம்பியுள்ள தமிழ் கட்சி தலைமைகள் தமக்குள் அதிகாரப்போட்டியும் சில்லறைத்தனமாக அரசியலும் போரில் இறந்த மக்கள் போராளிகளின் கல்லறைகள் மீதேறி தமது சுயநல அரசியலை மேற்கொண்டுவருகின்றார்களே ஒழிய ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.



ஐ.நா கூட்டத்தொடர் தொடங்கும் முன்னர் நித்திரையில் உள்ளவர்கள் போல் எழுந்து ஓர் அறிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பிவிட்டு யார் அனுப்பியது என்றுகூட தெரியாமல் அடிபடும் தமிழ் தலைமைகள் இவர்களா எமக்கான தீர்வை பெற்றுத்தருவார்கள்.

சிங்கள பெரும்பான்மை அரசியல் தலைமைகள், சிங்கள மக்கள், சிங்கள பௌத்த தலைமைகள் மனமுகர்ந்து தமிழர்களுக்கு தீர்வை கொடுக்க வேண்டுமென முடிவெடுத்தால் ஒழிய எமக்கான தீர்வு ஐ.நாவில் கிடைக்கப்போவதில்லை. அல்லது தமிழ் தலைமைகள் அனைத்தும் ஓர் அணியில் நின்று தமது அரசியல் பலத்தை காட்டி புலம்பெயர் தமிழர்கள், புலம் பெயர் அமைப்புக்கள், தாயக உறவுகள் எல்லாம் ஓரணியில் நின்று ஐ.நா சபையில் குரல் கொடுத்தால் தீர்ப்பு கிடைக்க சாத்தியமுள்ளது.

இதற்கான வழிமுறையை ஏற்படுத்துவதே சிறந்ததாகும். வெறுமனே ஐ.நா வையும் இந்தியாவையும் அமெரிக்காவையும் நம்பாமல் எமது பிரச்சனையை ஓரணியில் இணைந்து பலமான அரசியல் கொண்டு முன்னெடுப்பதே ஒரே வழியாகும்.

**தாயகத்தான்**

# தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவே வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும்



தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவே 2022இல் வடகிழக்கு இணைந்த தாயகத்தை உருவாக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகளுடைய ஒன்றிணைவு என்பது அத்தியாவசியமானதொன்றாகும். மூன்று தசாப்தங்கள் யுத்த சூனியத்துக்குள் சிறுபான்மை இனம் சிக்கித்தவித்தது என்பது வெளிப்படையான உண்மை. அதிலும் குறிப்பாக 83 ஜூலைக் கலவரம் என்பது இலங்கையரசினால் திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவெறித் தாக்குதலாகும். ஒரு ஈழ இராச்சியத்தை உருவாக்க ஆயுதக்கட்சிகள் ஒன்றிணைந்து மூன்று தசாப்த காலமான போரை நடத்தி வந்தனர். அதன் பின்னர் பூகோள அரசியலின் நிகழ்ச்சிநிரலுக்கமைய இலங்கையில் எந்த ஆயுதக்குழுக்களும் இயங்குவதை ஏற்றுக்கொள்ளாத சர்வதேச சமூகம். விடுதலைப்புலிகளுடனான அனைத்துவிதமான உறவுகளையும் துண்டித்து மாவிலாறில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட போர் முள்ளிவாய்க்காலில் இறுதியாக நிறைவுபெற்றது என்பது இலங்கைத்தீவில் சிறுபான்மை இனத்திற்கெதிராக நடந்த போராட்ட வரலாற்றின் சுருக்கம்.

மேற்குறிப்பிடப்பட்ட சுருக்கத்தின் விடயங்கள் நாம் அறிந்ததே. இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அதிகமாகவிருந்தும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ்த் தலைமைகள் சிந்திக்கவேண்டும் என்கிற நோக்கிலேயே இக்கட்டுரை அமைகின்றது. அதற்கமைய, ஒருசில படுகொலைகளின் விபரங்களை நாம் இங்கே பட்டியலிடுகின்றோம். குறிப்பாக, 2009-ம் ஆண்டின் மே 17,18,19 ஆகிய நாட்கள் மிகக் கொடூரமானவை, மறக்க முடியாதவை. ஈழத்தில் தமிழர்கள் மீது இனப்படுகொலையை 1956-ம் ஆண்டு துவக்கிய சிங்கள அரசு இன்றுவரை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடத்தி வருகிறது. நேரடிப் படுகொலைகள், மொழி அழிப்பு, கலாச்சார அழிப்பு, நிலப் பறிப்பு, சிங்களக் குடியேற்றம், வாழ்வாதார அழிப்பு, மதத் திணிப்பு என பல்வேறு வடிவங்களில் இனப்படுகொலையை நிகழ்த்தி வருகிறது. இறுதிப் போரின்போது மட்டும் 1,46,679 தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலும் ஆக்கப்பட்டார்கள் என்று மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்கள் மக்கள் தொகை ஆவணங்களின் வழியே அம்பலப்படுத்தினார். இன்றுவரை எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்படவே இல்லை. விடுதலைப் புலிகளின் தமிழீழ ஆட்சிப் பரப்பில் செயல்பட்ட வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் (NESOu;R) 1956 முதல் 2008-ம் ஆண்டு வரை நடைபெற்ற நேரடிப் படுகொலைகளை ஆவணப்படுத்தியுள்ளது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் தமிழீழ இனப்படுகொலைகளின் நேரடிப் படுகொலை நிகழ்வுகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளது.இதைத் தவிர ஆவணப்படுத்தப்படாத, கணக்கில் வராத படுகொலைகளும், இடப்பெயர்வுகளும் ஏராளம் இருக்கின்றன.

### இனப்படுகொலை 1956 – 2009

| எண் | படுகொலை பெயர் | நாள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | இக்கினியாகலை படுகொலை | 05.05.1956 | 150 |
| 2 | 1956 இனப்படுகொலை | 01.05.1958 | 300க்கு மேல் |
| 3 | தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை | 10.01.1974 | 9 |
| 4 | 1977 இனப்படுகொலை | 1977 | 1500 க்கு மேல் |
| 5 | பெரியபுல்லுமலை இனப்படுகொலை | 20.05.1980 | 25 |
| 6 | 1981 இனப்படுகொலை | 1981 | எண்ணிக்கை தெரியவில்லை |
| 7 | யாழ்நூலக எரிப்பு | 01.06.1981 | |
| 8 | 1983 இனப்படுகொலை | 23.07.1983 | 3000 க்கு மேல் |
| 9 | வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை | 25.07.1983 | 35 |
| 10 | திருநெல்வேலி படுகொலை | 24,25.07.1983 | 51 |
| 11 | சம்பல்தோட்டம் படுகொலை | 1984 55 | |
| 12 | சுன்னாகம் காவல்நிலைய படுகொலை | 08.01.1984 | 19 |
| 13 | சுன்னாகம் சந்தை படுகொலை | 28.03.1984 | 9 |
| 14 | மதவாச்சி–ரம்பாவா படுகொலை | 09.1984 15 | |
| 15 | திக்கம் படுகொலை | 16.09.1984 | 16 |
| 16 | ஒதியமலை படுகொலை | 01.12.1984 | 32 |
| 17 | குமுழமுனை படுகொலை | 02.12.1984 | 6 |
| 18 | செட்டிகுளம் படுகொலை | 02.12.1984 | 52 |
| 19 | மன்னார் படுகொலை | 04.12.1984 | 200 க்கு மேல் |
| 20 | கொக்கிளை கொக்குதொடுவாய் படுகொலை | 15.12.1984 | 131 |
| 21 | முள்ளிய வளை படுகொலை | 16.01.1985 | 17 |
| 22 | வட்டக்கண்டல் படுகொலை | 30.01.1985 | 52 |
| 23 | புதுக்குடியிருப்பு–ஐயன் கோவிலடி படுகொலை | 21.04.1985 | 30 |
| 24 | வல்வை 85 படுகொலை | 10.05.1985 | 70 |
| | | 03.05.1985 | 50 |
| | | 23. 05.1985 | 08 |
| 25 | திருகோணமலை படுகொலை | 24. 05.1985 | 09 |
| | | 27.05.1985 | 07 |
| | | 03. 06.1985 | 13 |
| 26 | குமுதினி படகு படுகொலை | 15.05.1985 | 36 |
| | | 01.01.1985 | 10 |
| | | 02.06.1985 | 13 |
| 27 | கிளிவெட்டி படுகொலை 1985 | 03.06.1985 | 53 |
| | | 14.06.1985 | 150 |
| 28 | திரியாய் படுகொலை | 08.08.1985 | 10 |
| | | 14.08.1985 | 06 |
| 29 | சாம்பல்தீவு படுகொலை | 04.08.1985 –09.08.1985 | 383 |
| 30 | வயலூர் படுகொலை | 24.08.1985 | 50 |
| 31 | நிலாவெளி படுகொலை | 16.09.1985 | 30 க்கு மேல் |
| 32 | பிரமந்தனாறு படுகொலை | 02.10.1985 | 11 |
| 33 | கந்தளாய் படுகொலை | 09.11.1985 | 6 |
| 34 | மூதூர் கடற்கரைசேனை படுகொலை | 8.11.1985 – 10.11.1985 | 30 |
| 35 | வங்காலை தேவாலய படுகொலை | 06.01.1986 | 9 |
| 36 | கிளிநொச்சி தொடருந்து நிலைய படுகொலை | 25.01.1986 | 12 |
| 37 | உடும்பன்குளம் படுகொலை | 19.02.1986 | 130 |
| 38 | ஈட்டி முறிஞ்சான் படுகொலை | 19.03.1986 – 20.03.1986 | 20 |
| 39 | பெரிய புல்லுமலை படுகொலை | 08.05.1986 | 18 |
| | | 10.11.1986 | 24 |
| 40 | அனந்தபுரம் ஏவுகணை தாக்குதல் | 04.06.1986 | 5 |
| 41 | கந்தளாய் படுகொலை | 04,05,06.1986 | 50 க்கு மேல் |
| 42 | மண்டைதீவு கடல் படுகொலை | 10.06.1986 | 33 |
| 43 | செருவில் படுகொலை | 12.06.1986 | 21 |
| | | 12.11.1985 | 09 |
| | | 26.11.1985 | 08 |
| 44 | தம்பலகாமம் படுகொலை | 25.05.1986 | 06 |
| | | 30.05.1986 | 04 |
| | | 20.06.1986 | 34 |
| 45 | பரந்தன் விவசாயிகள் படுகொலை | 28.06.1986 | 7 |
| 46 | பெருவெளி அகதிகள் முகாம் படுகொலை | 15.07.1986 | 48 |
| 47 | கண்டுவான் பேருந்து படுகொலை | 17.07.1986 | 17 |
| 48 | மூதூர் மணல்சேனை படுகொலை | 18.07.1986 | 14 |
| 49 | அடம்பன் படுகொலை | 12.10.1986 | 20 |
| 50 | பெரிய பண்டி விரிச்சான் படுகொலை | 15.10.1986 | 2 |
| 51 | கொக்கட்டிச்சோலை படுகொலை | 28.01.1987 | 133 |
| 52 | பட்டித்திடல் படுகொலை | 26.04.1987 | 17 |
| 53 | தோணிதட்டமடுபடுகொலை | 27.05.1987 | 13 |
| 54 | ஆலவாய் கோவில் படுகொலை | 29.05.1987 | 40 |
| 55 | மீளாய் மருத்துவமனை படுகொலை | 05.11.1987 | 5 |
| 56 | கிழக்கு பல்கலைக்கழகப் படுகொலை | 23,24.05.1990 | 226 |
| 57 | சம்மாந்துறை படுகொலை | 10.06.1990 | 37 |
| 58 | வீரமுனை படுகொலை | 20.06.1990–15.08.1990 | 233 |
| 59 | சித்தாண்டி படுகொலை | 20,27.07.1990 | 137 |
| 60 | பரந்தன் சந்தை படுகொலை | 24.07.1990 | 15 |
| 61 | பொத்துவில் படுகொலை | 30.07.1990 | 125 |
| 62 | திராய்கேணி படுகொலை | 06.08.1990 | 90 க்கு மேல் |
| 63 | கல்முனை படுகொலை | 11.08.1990 | 62 |
| 64 | துறைநீலாவணை படுகொலை | 12.06.1990 | 60 |
| 65 | ஏராவூர் மருத்துவமனை படுகொலை | 12.08.1990 | 10 |
| 66 | கோரவெளி படுகொலை | 14.08.1990 | 15 |
| 67 | சேனகன் படுகொலை | 26.08.1990 | 4 |
| 68 | நெல்லியடி சந்தை படுகொலை | 29.08.1990 | 16 |
| 69 | சத்துருக்கொண்டான் படுகொலை | 09.09.1990 | 205 |
| 70 | நட்பிட்டிமுனை படுகொலை | 10.09.1990 | 23 |
| 71 | வந்தாறு மூலை படுகொலை | 05ஂ23.09.1990 | 174 |
| 72 | ஒட்டுசுட்டான் படுகொலை | 27.11.1990 | 12 |
| | | 1984 | 09 |
| | | 1985 | 20 |
| 73 | புல்லுமலை படுகொலை | 1986 | 110 |
| | | 1987 | 34 |
| 74 | புதுக்குடியிருப்பு சந்தி படுகொலை | 30.01.1991 | 28 |
| 75 | உருத்ர புரம் படுகொலை | 04.02.1991 | 9 |
| 76 | வங்காலை படுகொலை | 17.02.1991 | 5 |
| 77 | வட்டாக்கச்சி படுகொலை | 28.02.1991 | 9 |
| 78 | வந்தாறு மூலை படுகொலை | 09.06.1991 | 10 |
| 79 | கொக்கக்கட்டிச் சோலை படுகொலை | 12.06.1991 | 220 க்கு மேல் |
| 80 | கிண்ணியடிபடுகொலை | 12.07.1991 | 13 |
| 81 | கரபோழை, முத்துக்கல் படுகொலை | 1991 | 97 |
| 82 | வற்றாப் பளை படுகொலை | 18.05.1992 | 14 |
| 83 | தெள்ளிப்பளை கோவில் படுகொலை | 30.05.1992 | 10 |
| 84 | மைலந்தனை படுகொலை | 09.08.1992 | 50 |
| 85 | கிளாலி படுகொலை | 02.01.1993 | 35 |
| | | 29.07.01993 | 17 |
| 17 | | | |
| 86 | மாத்தளன் படுகொலை | 18.09.1993 | 20 |
| 87 | சாவகக்கேசரி, சங்கத்தானை படுகொலை | 28.09.1993 | 30 |
| 88 | கொக்குவில் கோவில் படுகொலை | 29.09.1993 | 3 |
| 89 | குருநகர் தேவாலைய படுகொலை | 13.11.1993 | 13 |
| 90 | சுண்டிக்குளம் படுகொலை | 18.02.1994 | 10 |
| 91 | நவாலி தேவாலைய படுகொலை | 09.07.1995 | 150 |
| 92 | நாகர்கோவில் படுகொலை | 22.09.1995 | 40 |
| 93 | செம்மணி புதைகுழிகள் | 1996 | 400 |
| 94 | கிளிநொச்சி நகர படுகொலை | 1996–1998 | 184 |
| 95 | குமாரபுரம் படுகொலை | 11.2.1996 | 26 |
| 96 | நாச்சிக்குடா படுகொலை | 16.03.1991 | 19 |

13ஆம் பக்கம் பார்க்க...நெற்றிபொறியன்



# பிராந்திய செய்திகள்



## இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் கிழக்கு ஆளுநரிடம் !



இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளர் ஜெமீல் காரியப்பருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மகஜர் ஒன்றை தேசிய காங்கிரஸ் கட்சியின் இறக்காமம் பிரதேச அமைப்பாளர் சட்டத்தரணி கே எல் சமீம் ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் திரு.சாலுகவிடம் அன்று (30) கையளித்துள்ளார்.

குறித்த மகஜரில் அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்துவதில் தடை ஏற்படுத்தி வருகின்றமை, மற்றும் கடந்த பத்து மாதங்களாக சபை நிதி வீணடிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

## வெளிநாட்டு பிரஜையை திருமணம் செய்துகொள்ளும் இலங்கையர்களுக்கு நாளை முதல் புதிய சட்டம் அமுல்!

வெளிநாட்டு பிரஜையை திருமணம் செய்துகொள்ளும் இலங்கையர்களுக்கு 2022.01.01(சனிக்கிழமை) முதலாம் திகதி முதல் புதிய சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய, வெளிநாட்டவர்களை திருமணம் செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பதிவாளர் திணைக்களத்தினால் சகல மாவட்ட பதிவாளர் திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, வெளிநாட்டவர் தங்கள் நாட்டின் அதிகாரிகள் மூலம் பாதுகாப்பு பகுப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த விதிகள் அமுலுக்கு வரும் வகையில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பிரஜையை இலங்கைப் பிரஜை ஒருவர் திருமணம் செய்துகொள்ளும்போது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு பிரஜை ஒருவரை இலங்கை பிரஜை திருமணம் செய்துகொள்ள வேண்டுமாயின் இதற்கு முன்னர் உரிய விசா அனுமதி பத்திரம், சிவில் நிலைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பன மாத்திரம் அவசியமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீண்ட வார இறுதி நாட்களைக்கொண்ட 2022ஆம் ஆண்டு!

நாட்காட்டியின்படி 2022ஆம் ஆண்டு நீண்ட வார இறுதிகளின் ஆண்டாக காணப்படுகிறது.

அதன்படி, வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏழு பொது விடுமுறைகள் வந்துள்ளன.

ஜனவரி, ஏப்ரல், மே மற்றும் நவம்பர் மாதங்களில் பௌர்ணமி போயா விடுமுறைகள் வெள்ளி அல்லது திங்கட்கிழமைகளிலும் தைப் பொங்கல், சுதந்திர தினம் மற்றும் தீபாவளி என்பன வெள்ளி அல்லது திங்கட்கிழமைகளிலும் வந்துள்ளன.

சிங்களப் புத்தாண்டு, போயா மற்றும் புனித வெள்ளி ஆகியவை ஒன்றன் பின் ஒன்றாக வருவதால் ஏப்ரல் மாதத்தில் ஐந்து நாட்கள் நீண்ட வார இறுதி காணப்படுகிறது.

இதுதவிர, மே தினம், ஹஜ், கிறிஸ்மஸ் தினங்கள் மற்றும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாத போயா விடுமுறைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வந்துள்ளன. தொடர்ந்து வரும் திங்கட்கிழமைகளில் விடுமுறை அறிவிக்கும் வழக்கமான நடைமுறையை மேற்கொண்டால் நீண்ட வார இறுதி நாட்கள் காணப்படும்.

## பால்மா பொதிகளின் விலை மீள அதிகரிப்பு!

இறக்குமதி செய்யப்படும் பால்மா பொதிகளின் விலைகள் அன்று (வெள்ளிக்கிழமை) முதல் மீள அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 400 கிராம் பால்மா பொதியொன்று 60 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, 400 கிராம் பால்மா பொதியொன்றின் புதிய விலை 540 ரூபாயென்றும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலை 150 ரூபாயினால் அதிகரிப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் பால்மா பொதியொன்றின் புதிய விலை 1,345 ரூபாயாகும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

## உள்நாட்டு மதுபானங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச திறைசேரிக்கு வேண்டிய வரிகளை அதிகரிப்பதற்காக இவ்வாறு தீர்மானித்துள்ளதாக கலால் திணைக்களத்தின் பேச்சாளர், கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் உள்ள முழு சந்தையிலும் விற்கப்படும் அனைத்து மதுபான போத்தல்களுக்கும் இந்த பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் எந்தவித உணவு தட்டுப்பாடும் ஏற்படாது

நாட்டில் எந்தவித உணவு தட்டுப்பாடும் ஏற்படாது என்று விவசாய பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு சிறுபோக உற்பத்தி நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன. இந்த போகத்தில் பொதுவாக 4.3 தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது.

கனிம உரம் பயன்படுத்தப்பட்டு சிறுபோக உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்த வருடம் முதல் மனை உற்பத்தி திட்டத்தை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டம் பொதுமக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வீட்டுத்தோட்டத்தின் மூலம் பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்வதே நோக்கமாகும் என்று விவசாய பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## சாதனையாளர்களை கௌரவிக்கும் ஸாஹிரா விருதுகள் வழங்கி வைப்பு !!

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கல்விபயின்று கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் சாதாரண தரத்தில் திறமை சித்தியெய்திய மாணவர்கள் மற்றும் கடந்த வருடங்களில் உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் தேசிய ரீதியாக சாதித்த மாணவர்கள் எனப்பலரும் பாராட்டி கௌரவிக்கப்படும் "ஸாஹிரா விருதுகள்- 2021 வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். ஜாபிரின் தலைமையில் அன்று (30) சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

230 சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம். அப்துல் மலிக், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், சாய்ந்தமருது- மாளிகைக்காடு உலமா சபை தலைவர் எம்.எம்.சலீம், பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர், அந்நூர் செரிட்டி நிறுவன பிரதிநிதி, பாடசாலை பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள், பிராந்திய பாடசாலைகளின் அதிபர்கள், ஸாஹிரா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், சாதனை படைத்த மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.






## லிட்ரோ எரிவாயு நிறுவனம் அதிரடி அறிவிப்பு!

எரிவாயு சிலிண்டர்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை துரிதப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் இன்று அறிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த நிறுவனம் இதனை குறிப்பிட்டுள்ளது.

அனைத்து எரிவாயு சிலிண்டர்களும் முறையாக பரிசோதிக்கப்படுவதையும், சிலிண்டர்களை பராமரிப்பதில் ஏற்படும் தாமதத்தை தடுப்பதற்காகவும் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளையும் நிறுவனம் செய்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் 180,000 எரிவாயு சிலிண்டர்களை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அதேபோல், தினசரி நிரப்புதல் மற்றும் விநியோகம் 24 மணி நேரமும் முன்னெடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் எவ்வித தாமதமும் இன்றி சந்தைக்கு எரிவாயுவை வழங்க முடியும் என Litro மேலும் தெரிவித்துள்ளது.



# சினிமா துளிகள்



## புனித ராஜ்குமார் குடும்பத்தினை சந்தித்து ஆறுதல் கூறிய கமல்

புனித் ராஜ்குமாரின் குடும்பத்தினரை கமல் ஹாசன் சந்தித்தபோது, நடிகரும் இயக்குநருமான ரமேஷ் அரவிந்த் உடனிருந்தார்.

பிரபல கன்னட நடிகர் புனித் ராஜ்குமார், கடந்த அக்டோபர் மாதம் 29ம் திகதி மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். அவரது மறைவுக்கு திரையுலகினர் மட்டுமின்றி அனைத்து தரப்பினரும் இரங்கல் தெரிவித்ததுடன், அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்நிலையில், விக்ரம் படப்பிடிப்பிற்காக பெங்களூரு சென்றிருக்கும் கமல்ஹாசன் அங்கு, புனித் ராஜ்குமாரின் இல்லத்திற்கு சென்று, புனித் ராஜ்குமாரின் மனைவி மற்றும் குடும்பத்தாரை சந்தித்து ஆறுதல் கூறினார். கமல் ஹாசனுடன் நடிகரும் இயக்குநருமான ரமேஷ் அரவிந்த் உடன் சென்றிருந்தார்.





## தியேட்டரில் படம் பார்த்த விக்னேஷ் சிவன் - நயன்தாரா...

நடிகை நயன்தாராவும், விக்னேஷ் சிவனும் சென்னையில் உள்ள பிரபல திரையரங்கில் படம் பார்த்த புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த வாரம் வசந்த் ரவி, பாரதிராஜா, ரவீனா ரவி நடிப்பில் வெளியான திரைப்படம் 'ராக்கி'. இப்படத்தை நயன்தாரா - விக்னேஷ் சிவன், தனது ரவுடி பிக்சர்ஸ் நிறுவனம் மூலம் வழங்கி இருந்தார்கள். அருண் மாதேஸ்வரன் இயக்கிய இப்படம் ரசிகர்களிடையே வரவேற்பு பெற்று வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டு இருக்கிறது.

இந்நிலையில் விக்னேஷ் சிவனும் நயன்தாராவும் ராக்கி படத்தை எஸ்கேப் சினிமாஸில் பார்த்து ரசித்துள்ளனர். இந்தப் புகைப்படங்கள் தற்போது வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

## மாடர்ன் உடையில் நடிகை கீர்த்தி சுரேஷ்

நடிகை கீர்த்தி சுரேஷ் தென்னிந்திய திரையுலகில் டாப் நடிகையாக திகழ்ந்து வருகிறார்.

இவர் நடிப்பில் கடைசியாக அண்ணாத்த திரைப்படம் வெளியானது. இப்படத்தில் அவர் சூப்பர்ஸ்டார் ரஜினிக்கு தங்கையாக நடித்திருந்தார்.

அதனை தொடர்ந்து இவர் நடிப்பில் சாணி காயிதம் திரைப்படம் வெளியாகவுள்ளது. தெலுங்கில் குட் லக் சகி, மலையாளத்தில் மரைக்காயர் உள்ளிட்ட திரைப்படங்கள் வெளியாகவுள்ளது.

அடுத்தடுத்து கீர்த்தி சுரேஷ் சில டாப் நடிகர்களின் படத்திலும் நடிக்கவுள்ளார். அதன்படி கீர்த்தி சுரேஷ் தளபதி 66 படத்தில் விஜய் ஜோடியாக நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கீர்த்தி சுரேஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது புகைப்படங்களை பதிவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அந்த வகையில் தற்போது படு மாடர்னான உடையில் அவர் போஸ் கொடுத்துள்ள புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். புகைப்படத்தை கண்டு அசந்துபோன ரசிகர்கள் லைக்ஸ்களை குவித்து வருகின்றனர்.



## போனிகபூர் மகனுக்கு கொரோனா தொற்று

போனிகபூரின் மகனும், பிரபல இந்தி நடிகருமான அர்ஜீன் கபூருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

கொரோனா இந்தி திரையுலகினரை அடுத்தடுத்து தாக்க தொடங்கி உள்ளது. பிரபல இந்தி நடிகைகள் கரீனா கபூர், அம்ரிதா அரோரா ஆகியோருக்கு சமீபத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டு சிகிச்சைக்கு பின் குணமடைந்தனர். இந்த நிலையில் தற்போது இந்தி நடிகரும், தயாரிப்பாளர் போனிகபூரின் மகனுமான அர்ஜீன் கபூர் மற்றும் அவரது சகோதரி அன்ஷுலா கபூர் ஆகியோருக்கு உடல்நல குறைவு ஏற்பட்டு பரிசோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதியாகி உள்ளது.

இதுபோல் அர்ஜீன் கபூர் உறவினரும், பிரபல இந்தி பட தயாரிப்பாளரான ரியா கபூர் மற்றும் அவரது கணவர் கரண் பூலானி ஆகியோருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டு உள்ளது. போனிகபூருக்கும் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் பரிசோதனையில் அவருக்கு தொற்று இல்லை என்று தெரிய வந்துள்ளது.

கொரோனா தொற்றில் சிக்கிய அர்ஜீன் கபூர் மும்பையில் உள்ள ஒரு ஓட்டலிலும், மற்றவர்கள் வீட்டிலும் தனிமைப்படுத்திக்கொண்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.





## கைதி 2 படம் எப்போது? சூப்பர் அப்டேட்!

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 2019ல் தீபாவளிக்கு ரிலீஸ் ஆன படம் கைதி. கார்த்தி நடித்து இருந்த அந்த படத்தில் பாடல்கள் இல்லை, ஹீரோயின் இல்லை என வழக்கமாக தமிழ் சினிமாவில் இருக்கும் ட்ரெண்டை லோகேஷ் பின்பற்றி இருக்க மாட்டார்.

கைதி படத்தின் கிளைமாக்சில் இரண்டாம் பாகத்திற்கான ஹின்ட் கொடுக்கப்பட்டு இருக்கும். அதனால் கைதி 2 எப்போது வரும் என்று தான் ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது லோகேஷ் தற்போது இயக்கி வரும் விக்ரம் படம் முடிந்தபிறகு கைதி 2 பட ஷூட்டிங்கை தொடங்க இருக்கிறார் என தகவல் வெளியாகி இருக்கிறது. கமல் நடிக்கும் விக்ரம் படம் 2022 கோடை விடுமுறைக்கு ரிலீஸ் ஆன பிறகு தான் லோகேஷ் கைதி 2 பட பணிகளை தொடங்குவார் என தெரிகிறது.

கைதி 2ல் தில்லியின் பின்னணி, அவர் சிறைக்கு சென்றது ஏன் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை இழிவுபடுத்திய ஞானசார தேரருக்கு இறுதி எச்சரிக்கை – முனாஜித் மௌலவி

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது நான் சாணக்கியன் அவர்களிடம் ஒரு நேர்காணலை நடத்தி அவர் ஏன் இதனை செய்தார் இவ்வாறான பிரச்சனைகள் இருக்கின்றது என்று அவரிடம் இந்த கேள்வியை கேட்பது தான் சாலச்சிறந்தது. ஆனால் நான் இந்த கேள்வியை உங்களிடம் கேட்கின்றேன். இன்று உலகளாவிய ரீதியில் பார்க்காலும் சஹ்றான் குண்டுத்தாக்குதலை நடத்துவதற்கு முன் அங்கே அவர்கள் கூடி நின்று சத்தியப்பிரமாணம் செய்கின்ற பொழுது அல்ஹாவோ அப்பர் என்ற கோசத்தை முன்வைத்து காணொலியை எடுக்கின்றார்கள். அதற்கு முன்னர் வந்த காணொலியிலும் அல்ஹாகோ அப்பர் என்னும் கோசத்தை எழுப்புகின்றார்கள் தாக்குதலை நடத்துவதற்கு தயாராகின்றார்கள் சியோன் தேவாலயத்திற்கு தாக்குதல் நடத்தப்போகின்ற பொழுதும் மட்டக்களப்பு பள்ளிவாசலிலே தொழுகையை முடித்துவிட்டு அவர் நேரடியாக சியான் தேவாலயத்திற்கு செல்கின்றார் அதை காணொலியில் கூட போட்டுக்காட்டினார்கள். இன்று மனிதர்களை கொல்லும் பொழுதும், மிருகங்களை கொல்லும் பொழுதும், ஒரு விமானத்தை அடித்து நொருக்கும் பொழுதும் அல்ஹாவோ அப்பர் என்னும் இவர்களின் கோசத்தை இறைவன் ஏற்றுக்கொள்வாரா? எவருமே சிவனே பிள்ளையாரே முருகனே யேசுநாதரே என்று சொல்லிவிட்டு கொலை செய்வதில்லை. ஆனால் இங்கு மட்டுமில்லை முஸ்லிம் சமுகாயத்தினர் உலகளாவிய ரீதியிலே அவர்கள் அந்த கோசத்தை எழுப்புவது ஏன்?**

பதில் : அல்ஹாகோ அப்பர் என்றால் பொருள் என்ன தெரியுமா? அல்ஹா மிகப்பெரியவர் அல்ஹாவை விட வேறு பெரிய சக்தி இல்லை. நன்மையான அனைத்து விடயங்களுக்கும் இறைவனுடைய தீர்ப்பை கொண்டு ஆரம்பிக்கின்றேன் என சொல்ல வேண்டும். அல்ஹாகோ அப்பர் இறைவன் நீங்கள் பெரியவர் என்று அனைத்து நன்மையான விடயங்களுக்கும் செய்ய வேண்டும். பிழையான எந்த விடயத்திற்கும் அல்ஹாகோ அப்பர் என்று சொல்லக்கூடாது. ஆடு மாடுகளை வெட்டுவது என்பது வேறு ஏனென்றால் நீங்கள் மிருகங்கள் எதையும் அறுத்து சாப்பிடப்போவதாக இருந்தால் நீங்கள் இறைவனின் பெயர் கொண்டே அறுங்கள் அது ஆகும். மனிதனை அறுப்பதற்கு முன்பு அதை எவராவது சொன்னால் அது மிகப்பெரிய முட்டாள்தனம். நீங்கள் பார்க்கும் காணொலிகள் யாரோ ஒருவன் எங்கோ .ருந்து ஒருவனின் கழுத்தை அறுக்கின்றான். சஹ்றானை உதாரணம் சொல்வதற்கு அவன் நல்லவனா? சஹ்றான் என்ற ஒருவன் அல்ஹாவை வணங்கும் ஒருவன் முகமது நபியை பின்பற்றக்கூடிய ஒருவன் அவர் செய்திருக்க மாட்டான் என்று சொன்னேன். நீங்கள் கேட்கும் கேள்வி நியாயமானது ஆனால் சஹ்றான் செய்தது சரியா என்று கேட்டால் பிழை. யாரோ ஒருவரை இவர் இவ்வாறு செய்துவிட்டார் என்று கழுத்தை அறுப்பதனால் அவன் நல்லவனல்ல கெட்டவன். இது அவர்களின் பிழையான நடவடிக்கை சஹ்றானின் குழு அந்த காணொலியிலே அனைவரும் ஒரே மாதிரியான உடை போட்டிருந்தார்கள் அல்லவா அல்ஹா சொன்னாரா அப்படி போடும்படி இல்லை.

**கேள்வி : வெளியிடப்பட்ட காணொலிகளில் கூடுதலான முதுரசாக்கள் இருந்து கைப்பற்றப்பட்டது. எனவே இவ்வாறான மூலச்செலவுகளை செய்கின்ற நடவடிக்கைகள் தானே மேற்கொள்ளப்பட்டிருந்தது.**


பதில் : அல்ஹாவோ அக்பர் என்று சொல்வது இன்சா அல்ஹா என்று சொல்வது நல்லவற்றிற்காகப் பயன்படுத்துவது. தீயனவற்றுக்காக பயன்படுத்தப்படுவதல்ல. ஆனால்தீயதற்குதீயவர்கள்சொல்கின்றார்களே தவிர நல்லவர் சொல்வதில்லை. உதாரணமாக சிலர் சொல்லாமல் பிழையை செய்கின்றார்கள். இந்த மண்ணில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தீவுப்பகுதியில் எங்களுக்கு ஒரு தனி நாடு கேட்டோமா இல்லையா, வடகிழக்கு பிரித்து கேட்டோம் ஏன் கேட்டோம் ஆள்வதற்கு இவர்கள் தகுதியற்றவர்கள் எங்களுக்கு கேட்கும் உரிமைகளை தரமாட்டார்கள். ஆயுதம் தூக்க வேண்டி வந்ததா இல்லையா. ஆயுதத்தினால் என்ன நடக்கின்றது கொலை நடக்கின்றது. இன்னொரு ஆத்மாவை ஒரு மண்ணுக்காக கொலை செய்ய சொல்லி இந்து மதம் சொல்கின்றதா? கிறிஸ்தவ மதம் சொல்கின்றதா? எந்த மதமும் சொல்லவில்லை என்னும் பொழுது ஏன் செய்தார்கள் சுதந்திரத்திற்காக அடுத்தவரை கொலை செய்வதா. இந்த நாட்டுக்காக அல்லாஹாவோ அக்பர் என்று சொல்லிக்கொண்டு ஒருவரை கொலை செய்வது பிழையா? இல்லையா? அது பிழை. நாம் அதை சரிகாணவில்லையே அது நூற்றுக்கு நூறு வீதம் பிழை.

**கேள்வி : உங்களைப்போன்ற மௌலவிகள் நீங்கள் ஒரு உபதேசத்தை குறிப்பிட்ட மதராசாக்களிலும் வளர்ந்துவரும் ,ந்த முஸ்லிம் சமுதாயத்திடமும் நீங்கள் எடுத்துக்கூறினால் அது தவறா?**

பதில் : தாராளமாக சொல்கின்றேன். சரியை நான் செய்தால் யார் சொன்னாலும் கேட்டுக்கொள்வேன். பிழையை யார் செய்தாலும் அது என்னுடைய பாணி இந்த பள்ளிவாசலுக்கு முன்னால் 20 நாள் குழந்தையை எரித்தார்கள் அதற்கு நான் என்ன உதாரணம் சொன்னேன் தெரியுமா முள்ளிவாய்க்காலிலே பச்சைக்குழந்தைகளை பொஸ்பரஸ் குண்டுகளை போட்டு கொண்ட உங்களுக்கு எப்படியடா இந்த 20 நாள் குழந்தையின் பெறுமதி தெரியப்போகின்றது என்று சொன்னேன். நான் சொல்லவந்த விடயம் என்னவென்றால் பிழையை யார் செய்தாலும் பிழை. அல்லாஹாவோ அக்பர் என்று முஸ்லிம் அரபுச்சொல்லை சொன்னதனால் அது சரியாகிவிட முடியாது. பௌத்த மதத்தில் இங்கு மாடு அறுக்ககூடாது ஆடறுக்க கூடாது கோழியை அறுப்பது எல்லாம் உயிர்பலி கூடாது மனிதர்களை கொல்லலாமா?. சரி இலங்கையில் தமிழ் தேசியம் தமிழீழ விடுதலைப்புலிகள் குண்டு வைத்தார்கள் ஆட்களை கொன்றார்கள் என்பதற்காக பிழைக்கு தீர்வு இன்னொரு பிழையா. இல்லை இவர்கள் எப்படி கொன்றார்கள் முள்ளிவாய்க்காலிலே மக்களை கொல்லவில்லையா. என்னுடைய பார்வையில் உலகின் வளத்துக்காக வேண்டி இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களை யார் செய்தாலும் பிழை தான்.

**கேள்வி : அப்படியிருந்தால் தமிழ் பேசும் மக்கள் என்று கூறினீர்கள், சிங்கள இனம் தமிழினத்திற்கு எதிரான ஒரு போரை கட்டவிழ்த்துவிடுகின்ற பொழுது இந்த முஸ்லிம் தரப்புகள் அனைத்துமே சிங்கள தரப்புடன் இணைந்து தானே செயற்பட்டது. அன்று அஷ்ரப் அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிலே இணைந்திருந்தார். ஏன் அதனை நாங்கள் ஒன்றாக இணைந்து அரசை எதிர்த்து எங்களுக்கான சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாது?**

பதில் : நல்ல கேள்வி. இலங்கையை பொறுத்தவரையில் உலகமே தேவையில்லை இந்த உலகம் அழிந்துவிடும் உலகத்தினுடைய பொருட்களே தேவையில்லை என்று இருக்கின்ற எனக்கு வடக்கை பிரித்துதா கிழக்கை பிரித்துதா என்பது முட்டாள்தனம் என்று நான் சொல்லுகின்றேன். மூன்றே மூன்று இடங்களுக்காக வேண்டி தான் நாங்கள் யுத்தம் செய்ய முடியும். ஒன்று மக்கா, மதீனா, இன்று யுத்தம் நடந்துகொண்டிருக்ககூடிய பலஸ்தீன் ஆகிய இந்த மூன்று இடங்களை தவிர வேறு எந்த இடத்திற்காகவும் இனத்திற்காகவும் போராடக்கூடாது என்பது பாரதத்தினுடைய முடிவு. இருக்க வேண்டும் நன்மையை சொல்ல வேண்டும் கேட்டால் செய், கேட்காவிட்டால் ஒதுங்க வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் தேசியம்



வடகிழக்கை எங்களுக்கு பிரித்து தரும்படி கேட்டபொழுது நாங்கள் இங்கு மக்களுடன் இருக்கின்றோம் அந்த கருத்திற்கு நாங்கள் உடன்படவில்லை ஆனால் சிங்கள மக்களால் நாங்கள் அநியாயம் செய்யப்பட்டோம். தமிழ் பேசுபவர்களுக்கு அநியாயம் செய்யப்பட்டோம். முதல் கட்டமாக தமிழ் தேசிய மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இரண்டாம் கட்டமாக அவர் நேரடியாக இன்று முஸ்லிம்களை தாக்குகின்றார்கள். எனவே ஒரு வரலாற்று தவறாக நான் சொல்லுகின்றேன் பிரச்சனையிலிருந்து தவிர்ந்து தனியாக வாழ்வதற்காக வடகிழக்கை பிரித்துதரும்படி கேட்டபொழுது நாம் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்திருக்க வேண்டும் என்பது வாஸ்துவம். முஸ்லிம்கள் சேரவில்லை நான் சேரவில்லை ரவூப் ஹக்கீம் சேரவில்லை அரசியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேரவில்லை கருணா அம்மான் பிரபாகரனுடன் சேர்ந்தாரா இல்லையா. என்ன நடந்தது வெற்றி கண்டீர்களா? பிரிந்தார்கள் ஏன் பிரித்தார்கள்.

தமிழ் தேசியம் தமிழீழம் விடுதலை கேட்டுக்கொண்டிருக்கின்றது தரமாட்டோம் என்றும் ஒன்று இருக்கின்ற பொழுது முஸ்லிம்கள் அப்பொழுது தனி சமூகமாக இருந்தபொழுதும் அரசியல் தலைமைத்துவம் இருக்கவில்லை. ஆன்மீகத் தலைமைத்துவம் இருக்கவில்லை. அப்படி இருந்தது எல்லாம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருந்தபொழுது முஸ்லிம்களுக்கு ஒட்டுமொத்த என்று தனி அலகு இருக்கவில்லை. தனித் தலைமைத்துவம் இல்லை ரவூப் ஹக்கீமை மட்டும் பேசினார்கள். அந்தகட்டத்தில் ரவூப் ஹக்கீமை எதிர்த்தவர்கள் இல்லையா இருந்தார்கள். எனவே ஒரு நீண்ட தூரசமூகத்தை மனிதர்களை நோக்கி ஒரு தீர்வை நோக்கி போகும்பொழுது கண்டிப்பாக நன்றாக யோசித்து எடுக்க வேண்டும். நான் அண்மையில் ஒரு சர்ச்சையில் சதாமுசைன் செய்தது இந்த சமூகத்திற்கு பெரியதொரு அநியாயம் என்று கூறினேன். சதாமுசைன் ஈராக் நாட்டு மக்களின் பில்லாதீன் என்று சொல்லக்கூடிய சவுதி அரேபியாவில் இருந்த ஒரு பில்லாதீன் அவர் அங்கு இருந்துகொண்டு இன்னுமொரு பிரச்சனையை செய்துவிட்டு ஓடிவந்து ஆப்கானிஸ்தானில் ஒழிந்திருக்கின்றார். ஆப்கான்கள் கொல்லப்பட்டார்களா இல்லையா ஆப்கான்கள் பில்லாதீனை தேடி எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் இந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்டவராக பில்லாதீன் இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும் நான் தானே வேண்டும் நான் வருகின்றேன் இந்த மக்களை கொல்லாதீர்கள் என்று சொல்லியிருக்க வேண்டும் ஆனால் சதாமுசைன் ஒழிந்திருந்தார் எப்பொழுதும் எங்களுக்கு என்ன பலம் இருக்கின்றதோ அந்த பலத்தை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சண்டைக்கு போக வேண்டும்.

**கேள்வி : இப்பொழுது சிறுபான்மைக்கு எதிராக முஸ்லிம்களும் தமிழர்கள் அனைவருமே சிறுபான்மையினம் என்று சொல்லி அடிமைப்படுத்துகின்ற இனமாக தற்பொழுது கலகொட ஞானசார தேரர் கோட்டபாய ராஜபக்சவினுடைய அரசு எல்லாமே செயற்படுகின்றது.இவ்வாறானஅடக்குமுறைகள் ஏற்படுகின்ற பொழுது ஒரு இறைவனை நிந்திக்கின்றதான செயற்பாட்டை இந்த அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது இன்று றிஷாட் பதியூதின் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார், அசாத்சாலி சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார், அசாத்சாலியின் தம்பி அடைக்கப்பட்டிருக்கின்றார் இவ்வாறெல்லாம் ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் தனக்குள்ளே இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளை வைத்திருந்தது. வைத்திருந்து தனது அரசியல் வேட்டையை முடிக்க பிற்பாடு இன்று முஸ்லிம்கள் மீது தனது போரை தற்பொழுது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இதனை நீங்கள் இனியாவது ஒரு சமுதாயமாக ஒரு குடையின் கீழ் செயற்படுவதற்கான முன்னெடுப்புக்களை தமிழ் தேசிய கூட்டமைப்புடனோ அல்லது ஏதோவொரு தமிழ் யுனிட்டுடன் இணைந்து செயற்படக்கூடாது?**

பதில்:தாராளமாகசெயற்படலாம்செயற்படுவதில் இரண்டு கருத்து கிடையாது. ஆனால் முதன் முதலில் எடுத்ததும் சாணக்கியன் ஐயாவின் நல்லதை பொத்துவில் முதல் பொலிகண்டி வரை என்று ஒரு பயணத்தை தொடங்கிக்கொண்டு வந்தார்கள். அதில் அனைவருமே பேசியிருந்தார்கள் வடகிழக்கு இணைப்பு பற்றி சாணக்கியன் என்ன சொல்கின்றார் என்று தான் அனைவருமே கேட்டார்கள். முதலாவதாக உள்ளங்கள் ஒன்றுபட்டால் கஷ்டமான விடயங்கள் பற்றி இலகுவாக பேசி தீர்மானிக்கலாம் உள்ளம் முரண்பட்டால் இலகுவான விடயங்கள் கூட கஷ்டமாக இருக்குமா இல்லையா கஷ்டமாக இருக்கும் இவர்கள் வடகிழக்கு இணைப்பு பற்றி தான் முதலில் பேசுவது அல்லது கரையோர பிரதேசங்களைப் பற்றி பேசுவது. எது தமிழ் மக்களுக்கிடையிலே அல்லாஹாவை வணங்குபவர்களுக்கும். கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கும் சைவர்களாக இருப்பவர்களுக்கும் என்ன பிரச்சனை வருமோ அந்த பிரச்சனைகளை முதலில் தூக்கி போட்டுவிட்டு அந்த பயணத்தை தடைப்படுத்துவது. அழகான தலைமைத்துவம் ஒன்று வேண்டும் அதில் தமிழ் பேசுகின்ற கொள்கை மாறாதவர்கள் தலைவர்களாக வரவேண்டும். தேர்தலில் ஒரு பேச்சு அபிவிருத்தியில் ஒரு பேச்சு பேசுகின்ற எவரும் வரக்கூடாது. இனிமேல் அடுத்தகட்ட இன்சா அல்லாஹா இறைவன் உயிருடன் இருந்தால் இந்த கொள்கையை விட்டுக்கொடுக்கின்ற எவரையும் பாராளுமன்றம் அனுப்புவதற்கே முஸ்லிம் மக்கள் தயாராகமாட்டார்கள் என்ற அதற்குரிய பிரச்சாரங்களை தான் நாங்கள் தற்பொழுது செய்துகொண்டிருக்கின்றோம். ஒருபொழுதும் நாங்கள் தமிழ் மக்கள் தந்தை செல்வாவிற்கு பின்னால் எங்களுக்கு யுஎம்பியில் குலேந்திரன் ஐயா இருந்தார் அழகான முறையிலே எங்களது ஊரில் பல பேருக்கு ஜீஎஸ் வேலைகளை கொடுத்ததும் அவர்கள் தான் உள்ளங்கள் நல்லா இருந்தது தெளிவாக இருந்தது நாங்கள் கடும் ஒற்றுமையாக இருந்த ஆட்கள். இன்றும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். கடல் நீரை கரண்டியால் அள்ளுவதை போன்று கஷ்டமாக இருக்கின்றது இந்த ஒற்றுமையை பற்றி பேசுவது. எனவே அழகான ஒரு தலைமைத்துவம் வரவேண்டும். அது விலைபோகாத அபிவிருத்திகளை கண்டு மடங்காத ஒரு தலைமைத்துவம் வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க..

நேர்காணல் : இரணியன்

02 அம் பக்க தொடர்ச்சி...

1981 மே 24ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மாவட்ட சபைத் தேர்தல் வேட்பாளரான ஐ.தே.க.வைச் சேர்ந்த ஏ.தியாகராஜா இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மீண்டும் அவசரநிலை 1981 ஓகஸ்ட் 17ல் போடப்பட்டு 1982 ஜனவரி 16ம் திகதி வரை அமுலில் இருந்தது. அதேவேளை 1982ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் நிரந்தர சமாக்கப்பட்டது.

## 83இல் இனப்படுகொலையில்

வரலாற்றில் முக்கியமான அவசரகால நிலையாக 1983 மே 18ம் திகதி போடப்பட்டதையே குறிப்பிட வேண்டும். 83 இனப்படுகொலை கூட இதன் கீழ் தான் நடத்தப்பட்டது. "சாதாரண சட்டத்தின் மூலம் அடக்க முடியாத சட்டத்தை இந்த சட்டத்தின் மூலம் தான் அடக்கமுடியும்" என்று கூறிய சிறில் மெதிவ் "அவர்களை விசர் நாய்களைப் போல கொல்லவேண்டும்" என்கிற தொணியில் கர்ஜித்தார்.

இனக் கலவரத்தை திட்டமிட்டு தாமே முன்னின்று நடாத்திய ஜே.ஆர் அரசாங்கம் கலவரத்திற்கு பொறுப்பாளிகள் என்று கூறி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகியவற்றைத் தடை செய்ததுடன் அவற்றின் பத்திரிகைகளையும் கூடவே தடை செய்தது.

அந்த அநீதியான தடையினால் இளைஞர்கள் பலர் தலைமறைவு அரசியலுக்கும் தீவிர அரசியலுக்கும் விரைவாகவே தள்ளப்பட்டார்கள். அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சியிலிருந்த ஐ.தே.கவினரும் படையினரும் சேர்ந்து நடாத்திய இனப்படுகொலைகள் சாதாரணமானவையல்ல. ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் எத்தனையோ நடந்தேறின. வெலிக்கடைப் படுகொலைகள் நடைபெற்றது. பலர் அகதிகளாயினர். இச்சம்பவம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பெருமளவு ஊக்குவித்தது. 1983 மே 18ம் திகதி நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு அமைச்சர் தொண்டமானும் ஆதரவாக வாக்களித்திருந்தார். மலையக மக்களை ஒடுக்குவதற்கு அவரது ஆதரவு பயன்பட்டது. 77க்குப் பின் அத்தனை தடவையும் தொண்டமான் அவசரகால சட்டத்தை ஆதரித்தே வந்தார்.

## எரியூட்டப்பட்ட யாழ் நூலகம்

அன்றைய அந்த அவசரகாலச் சட்டம் 1989 ஆம் ஆண்டு ஜனவரி 11 வரை அமுலில் இருந்தது. அந்த இடைக் காலத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்திருந்தன. குறிப்பாகத் தென்னிலங்கையில் பல தொழிலாளர்கள் மாணவர்கள் உட்பட பல கிராமிய இளைஞர்களுமாக 60,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவர்கள் அவசர காலச் சட்டத்தின் பேரால் டயர்களுக்கு இரையாக்கப்பட்டனர். புதை குழிகளுக்கு அனுப்பட்டனர். ஆறுகளில் பிணமாக மிதக்க விடப்பட்டனர். வதை முகாம்கள் எத்தனையோ இயங்கின. இதே அவசர காலச் சட்டத்தின் மூலம் ஆளும் கட்சியினர் தமது சொந்தப் பழிகளையும் தீர்த்துக் கொள்ள வழிவகுத்தது.

வடக்கு கிழக்கிலும் பல இளைஞர்கள் அநியாயமாக சந்தேகத்தின் பேரில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். போதாததற்கு இந்திய அமைதிகாக்கும் படையையும் இந்த அநியாயங்களை புரிவதற்கு பங்காளிகளாக்கிக் கொண்டது ஜே.ஆர். அரசாங்கம். இலங்கைப் படையே மேல் எனப் பேசும் அளவிற்கு இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் நடந்திருந்தது. இதே அவசரகால சட்டம் இந்தியப் படையினருக்கு உச்ச அளவில் பயன்பட்டது.

இந்த அவசரகால நிலையும் 89 ஜனவரி 11ல் நீக்கப்பட்டிருக்கையில் ஒன்பதே நாட்களில் அதாவது ஜனவரி 20ம் திகதி மீண்டும் பிரேமதாசாவால் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அது 1994 செப்டம்பர் வரை அமுலில் இருந்தது. 94 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் தோற்ற ஐ.தே.க நவம்பர் மாத ஜனாதிபதி தேர்தலிலாவது வெல்வதற்கான வழிகளில் ஒன்றாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க செப்டம்பர் மாதம் அவசரகால சட்டத்தை நீக்கினார்.

குறிப்பாக வடக்கில் இந்திய இராணுவம் தனது "அமைதி காக்கும்" பணியில் பல அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த போது தென்னிலங்கை இளைஞர்களை நசுக்க இலங்கை இராணுவத்திற்கு வசதியாக வாய்ப்புக் கிடைத்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வேளை தென்னிலங்கையிலும் தமது அழிப்புகளைச் செய்து ஓய்ந்திருந்தது இலங்கை இராணுவம். மீண்டும் அதே இராணுவம் வடக்கில் ஓயாது இன அழிப்பை நடத்துவதற்காக இறக்கிவிடப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான பல இராணுவ நடவடிக்கைகளையும் இனப்படுகொலைகளையும் நடாத்தியிருந்தது. கொக்கட்டிச்சோலை, மயிலந்தனை போன்ற பெரிய இனப் படுகொலைகளைச் செய்ய அவசரகாலச் சட்டமே அங்கீகாரமளித்தது. அக்குற்றங்களை புரிந்த இராணுவத்தினர் மீது இராணுவ விசாரணை எனும் போர்வையில் போலி நாடகமாடியது.

## ஆதரித்தோரும் எதிர்த்தோரும்

1994 இல் ஜே.வி.பி பாராளுமன்றத்தில் இடம்பிடித்தபோது தொடர்ச்சியாக அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்தது. சந்திரிகா அரசாங்கத்தின் போது அவசரகால சட்டத்தை எதிர்த்து ஒற்றைப் பிரதிநிதியாக (நிஹால் கலப்பத்தி) வாக்களித்த ஒரே கட்சி அது தான். அதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி 87-89 காலப்பகுதியில் ஜே.வி.பியை கிட்டத்தட்ட முழுமையாக அழித்திருந்தது அரசாங்கம். ஆகவே அதன் வலி தெரியும். ஆனால் அதன் பின் வந்த அரசாங்கங்களின் போது ஜே.வி.பி இனவாத நிலைப்பாடு எடுத்தவேளை அவசரகால சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததையும் வரலாறு மறக்கவில்லை. அதே காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த இ.தொ.கா, ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட வெளியில் அவசரகால சட்டத்துக்கு எதிராக அறிக்கைவிட்டுக்கொண்டு அந்த சட்ட நீடிப்பன்று அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்தன என்பதும் கவனிக்கத்தக்கது. **தமிழ் மக்களின் தலைவர்களைக் கொண்டே தமிழ் மக்களின் கண்களை பிடுங்கும் வேலை கச்சிதமாக அரசாங்கத்தால் அரங்கேறியது.**

ஐ.தே.க இந்த காலத்தில் முதலில் எதிராக வாக்களித்த போதும் பின்னர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நழுவிவிட்டு, சில காலங்களின் பின்னர் ஆதரவளிக்கத் தொடங்கியது. எதிர்த்தால் "பயங்கரவாதத்தை" ஆதரித்ததாக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டுவிடும் என்கிற பயம் அவர்களுக்கு இருந்தது.

2009 இல் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒட்டுமொத்தமாக நசுக்கி துடைத்தெறிய இந்த சட்டமே இரும்புக் கரமாக சிங்கள ஆட்சியாளர்களுக்கு இருந்தது. ஜெனிவாவில் அரசாங்கம் ஒத்துகொண்டபடி 2011 ஓகஸ்ட் 26 அவசரகால சட்டத்தை நீக்கியது. ஆனால் 06.09.2011 வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் அதன் பல அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. கூடவே பயங்கரவாத தடைச் சட்டம் இன்னமும் பயன்படுத்தப்படுவது பற்றி "மனித உரிமைகள் கண்காணிப்பு" சமீபத்தில் விமர்சித்திருக்கிறது.

1942 இலிருந்து 2011வரையான 69 வருட காலத்தில் அதிகமான காலம் இலங்கை மக்கள் அவசரகால சட்டத்தின் கீழ் தான் ஆட்சிசெய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றும் தேவையேற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படுகிறது. டெங்கு ஒழிப்புக்காகக் கூட அது பிரகடனப்படுத்தப்படுகிறது. அத்தோடு அது நிற்கட்டும்.

தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களுள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் நல்லாட்சி அரசாங்கம் என்ற ஒரு நாடகத்தை நடத்தினார். அதில் பலரும் ஏமாற்றமடைந்தனர். நம்பிக்கைத் துரோகம் செய்தவராக தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் வலம்வந்த மைத்திரிபால சிறிசேன, தமிழ் மக்களுக்கானத் தீர்வில் அக்கறை காட்டவில்லை. இலங்கை வரலாற்றில் ஆட்சியலிருந்த போதே ஒரு ஆட்சிமாற்றத்தை உருவாக்கி மஹிந்த ராஜபக்ச அவர்களை பிரதமராகக் கொண்டு வந்தார். அதன் பின்னர் காப்பந்து அரசாங்கம் நிறுவப்பட்டது. அது தவறு என வாதிட்ட சுமந்திரன் போன்ற பல அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் அதில் வெற்றியும் பெற்று சாதனையொன்றையும் படைத்தனர். இந்த சூழ்நிலையில் நல்லாட்சியும் தமிழினத்திற்கு துரோகத்தினை செய்தது. அதன் பின்னர் சிங்கள பேரினவாதத்தை இந்த நாட்டில் விதைத்து தனிச் சிங்களவர்கள் இந்த நாட்டில் ஆட்சியமைக்க முடியும் என்ற தோரணையில் பௌத்த துறவிகளை இந்த நாட்டில் களமிறக்கி இனவாத மதவாத தேசிய வாதங்களைத் தூண்டி சிங்களப் பெரும்பான்மையினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசு பாரிய வெற்றி பெற்றது.

அதன் பின்னர் சிறுபான்மை சமுகத்துடன் பேச்சு நடத்த இவ்வரசு பின்னிற்கிறது. இராணுவப் புரட்சியினை ஏற்படுத்தும் வகையில் அனைத்துவிதமான நாட்டின் கட்டமைப்புக்களிலும் ஓய்வுபெற்ற இராணுவத்தை நிறுத்தி தமக்கான கட்டமைப்பை பலப்படுத்தி வருவதுடன் காலப்போக்கில் இந்த நாட்டில் இராணுவப்புரட்சி ஏற்படுத்தப்படலாம். ஆகவே ஒட்டுமொத்த ஆட்சியாளர்களும் வட-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதோடு சமகால அரசியலில் தமது இனவாதப்போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றமை இன்றைய யதார்த்தபூர்வமான உண்மை. இதனை முறியடிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளையும் எந்தக் கட்சியும் மேற்கொள்ளவில்லை என்பதே நீண்டகால வரலாற்றுப் பதிவாகும்.

## சீனாவுக்கு எதிரான நிழல் யுத்தத்திற்கே இலங்கை அரசு தயாராக இருக்க வேண்டும் - சிறுபான்மை இனத்திற்கு எதிராக அல்ல

கடந்த வார தொடர்ச்சி...

இந்த சந்தர்ப்ப சூழ்நிலையை பயன்படுத்தி ஒன்று இந்த நாட்டை காப்பாற்ற வேண்டும் திருகோணமலை துறைமுகம் என்பது அங்கிருந்து ஒரு உலக மகாயுத்தத்தை கூட மேற்கொள்ளக்கூடிய அரணாக இருக்கின்றது. இங்கிருந்த கடந்த உலக மகாயுத்தத்தின்பொழுது திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஜப்பானுக்கு படையெடுத்து தாக்குதலை நடத்தினார்கள் என்ற வரலாறு இருக்கின்றது. ஆகவே முஸ்லிம்களை பொறுத்தவரையில் கிழக்கிலே ஓட்டமாவடியில் ஆரம்பித்து இடையிடையே வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற இடங்களில் எல்லாம் இவர்களுடைய அரண்களை தாங்களே வைத்திருக்கின்றார்கள். இங்கிருக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். அரசுக்கு தொடர்ந்தும் குரல் கொடுத்து வருவதாலும் அரசாங்கத்துடன் தொடர்ச்சியாக நீங்கள் கைகோர்ப்பதாலும் எந்த இலாபமும் கிடைக்கப்போவதில்லை. அரசாங்கம் எப்பொழுதும் தமக்கு சாதகமான ஒரு செயலணியை உருவாக்கி தங்களுடைய விடயங்களை காய் நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் தரப்போடு முஸ்லிம் தரப்பு இணைந்து செயற்பட வேண்டுமே தவிர இதனை குழப்பியடிக்கின்ற நடவடிக்கைகளில் முஸ்லிம் தரப்பு ஒருபோதும் ஈடுபடக்கூடாது. நீங்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாயை திறந்து எதுவுமே பேசவில்லையே. நீங்கள் தமிழ் தரப்போடு தானே முட்டி மோதுகின்றீர்கள் தமிழ் தரப்பிலே சாணக்கியன் எதனையும் சாதித்திருக்கின்றாரா சாணக்கியன் இதுவரை என்ன சாதித்திருக்கின்றார். சுமந்திரன் அவர்களை சொல்லலாம் ஒரு ஆட்சி மாற்றத்தைக்கூட மாற்றியமைக்கக்கூடிய வல்லமை கொண்ட ஒரு சட்டத்தரணி அதில் மாற்றுக்கருத்தில்லை அவர் அரசாங்கத்துடன் சில நடவடிக்கைகளை செய்தாலும்கூட இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை சுமந்திரன் மீது ஒரு பாரிய பயம் ஒன்று இருக்கின்றது. அது அனைவரும் அறிந்த உண்மை இன்று தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்று கூறுகின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட என்ன செய்யவேண்டும் என்றால் அரசாங்கம் அது சார்பான நிலவரத்திற்கு வரவில்லை என்றால் அடுத்தகட்டம் ஆயுதப்போராட்டம் தான். தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை இல்லையென்றால் ஆயுத போராட்டம் தான். அதற்கான அடுத்தகட்ட காய் நகர்வுகளை அவர்கள் நகர்த்த வேண்டும். அது வெளிப்படையாக நகர்த்த வேண்டிய தேவைகிடையாது. மறைமுகமாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டும். எனவே இதுபோன்று இன்று மகிந்தராஜபக்சவோடு கோட்டபாயராஜபக்சவோடு இவர்களுடன் எல்லாம் படம் எடுத்து திரிகின்ற அல்லது கடந்த காலங்களில் பிள்ளையானுடன் பணிபுரிந்த அந்த கட்சியிலிருந்த சாணக்கியன் அவர்கள் கிழக்கிலே ஒரு புரட்சியை உருவாக்கலாம் என்று நினைக்கின்றார். முஸ்லிம்களுடைய மனதை வெல்லலாம் என்று நினைக்கின்றார்கள். அவர் வயது சென்றாலும் கூட அப்படியான நகர்வுகளை இங்கு நகர்த்த முடியாது. ஏனென்றால் சரியோ பிழையோ முஸ்லிம்கள் ஒருகட்டத்தில் அவர்கள் ஒன்றாகிவிடுவார்கள். ஒரு வாக்கு கூட சாணக்கியன் எடுக்கமுடியாது. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு எதிராக முஸ்லிம்களுக்கு ஆதரவாக சாணக்கியன் அவர்கள் குரல் கொடுக்கின்றார் செய்கின்றார் என்ற ரீதியிலே முஸ்லிம் தரப்பினர் வாதாடிதிரிக்கின்றார்கள். ஆனால் தேர்தல் வரும் பொழுது சாணக்கியனுக்கு ஒரு முஸ்லிம் வாக்குகள் கூட கிடைக்காது. அதாவது முஸ்லிம்களின் இன்றைய நிலவரமும் அன்றைய நிலவரமும் அப்படித்தான். இதிலே குறிப்பிடவேண்டிய விடயம் என்னவென்றால் பாராளுமன்றத்திலே அநாவசியமான கதைகளை எந்த தரப்புமே பேசத்தேவையில்லை அரசாங்கம் செய்யும் பிழைகளை சுட்டிக்காட்டி முஸ்லிம் தரப்புகள் விடுகின்ற பிழை தமிழ் தரப்போடு மீண்டும் மோதுகின்றது. தமிழ்தரப்பினருக்கு வேறு அரசியல் இல்லை என்ற வகையிலே முஸ்லிம்களை தென்டுகின்றார்கள் சிங்களவர்களை தென்டுங்கள், சிங்கள தலைமைகள் அல்லது இந்த நாட்டினுடைய ஜனாதிபதி தமிழ் மக்களுக்கான தீர்வை தரவில்லை. ஆகவே நீங்கள் அதனை தட்டிக்கேற்கும் நடவடிக்கைகளை கேட்க வேண்டும். அல்லது பாராளுமன்ற வளாகத்தை சுற்றி உண்ணாவிரத்தில் ஈடுபடுங்கள் தமிழ் மக்களுக்கான தீர்வை கொடுப்பதற்கு, கைது செய்யப்பட்டாலும் பரவாயில்லை அதுவொரு வரலாறாக எழுதப்படும். அதைவிட்டுவிட்டு உயர்ந்த பாராளுமன்றத்திலே அநாவசியமான கதைகளை உங்களுடைய வீட்டு பிரச்சனைகளை கிளப்ப தொடங்கினால் அது அசிங்கமாகத்தான் இருக்கும். அடுத்த போர் என்பது சீனாவிற்கு எதிரான போராகத்தான் இலங்கை திரும்பப்போகின்றது என்பது வரலாற்று ரீதியாக இடம்பெறப்போகின்றது என்பது உண்மையே.

10ஆம் பக்க தொடர்ச்சி...

இன்சா அல்ஹா இறைவன் நாடினால் அது வெகு விரைவில் வடகிழக்கு இணைந்துகொண்டு நாங்கள் கனவு கண்டு நல்லதொரு பூரண சுதந்திரமான ஒரு வாழ்க்கையை வாழலாம் வாழ வேண்டும்.

**கேள்வி : நீங்கள் மௌலவி என்ற ரீதியிலே இந்த கலகொட ஞானசார தேரருக்கு எதிரான நடவடிக்கைகளை மௌலவிகள் இணைந்து அல்லது இதற்கான ஒரு தீர்வு என்ற வகையில் எப்படி அதை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கின்றீர்கள்?**

பதில் : சமுதாயத்திற்கு ஒரு தகவலை சொல்கின்றோம் அவர் ஒரு பைத்தியக்காரன். வெறி பிடித்தவன், நல்லதே வாயில் வராத ஒருவருக்கு அவரிடம் போய் நீதி கேட்பது அவர்களை வைத்து செயற்படுத்தக்கூடிய ஒரு தலைமையிடம் போய் நீதி கேட்பது எந்த வித அர்த்தமும் இல்லை. யாரை பேசினார் தெரியுமா இந்த உலகத்தையே ஆட்சி செய்யக்கூடிய உலகத்தை படைக்கின்ற மறுமைக்கும் சொந்தக்காரனான அல்ஹாவை இறைவனை பேசியிருக்கின்றார். அந்த இறைவன் இவருக்கு தண்டனை கொடுப்பார். ஞானசாரதேரர் அல்ஹாவை பேசியிருக்கின்றார் எனவே அல்ஹா இடத்திலேயே பொறுப்புசாட்டுகின்றோம் கண்டிப்பாக இந்த ஞானசார தேரருக்கு தண்டனையை கொடுப்பதற்கு இறைவன் போதுமானவன் என்ற நிறைந்த நம்பிக்கை இருக்கின்றது.



# பல்சுவை கதம்பம்



## நம்முடைய கண்களை பாதுகாக்கும் வழிமுறைகள்

ஆனால் இன்று எல்லோருக்கும் பார்வைத் திறன் குறைந்து வருகிறது. இதனை ஓரளவு சரிசெய்ய இந்த சிகிச்சை முறைகள் உதவும். இது சிறந்த இயற்கை மருத்துவமாகும்.

**கண்களை கழுவுதல்**

குளிர்ந்த சுத்தமான குடிதண்ணீரைக் கண் கிண்ணத்தில் வழிய வழிய நிரப்பிக் கொள்ளவும். தலையைக் குனிந்து கொண்டு விழித்து கண் கிண்ணத்தினுள் கண்ணைப் பொருத்தவும். இப்போது கண் விழி நீரினுள் மூழ்கி இருக்கும். கண் விழியினை உருட்டவும். இமையை லேசாக மூடித் திறக்கவும். பல முறை இவ்வாறு செய்யவும். அடுத்த கண்ணுக்கும் இவ்வாறே செய்யவும். கண் எரிச்சலாக இருக்கும்போது செய்யலாம். சினிமா பார்த்துவந்த உடனே செய்யலாம். டிவி பார்த்த பின்பு செய்வது நல்லது. மிக அவசியம் என்று தான் கூறவேண்டும். சமையல் புகை, தாளித்த புகையின் கெடுதலைத் தவிர்க்க சமையலறையில் வைத்து கண் கழுவி விடுதல் பெண்களுக்குப் பெரும் உதவியாகும். கண் கழுவ உபயோகிக்கப்படும் தண்ணீர் குளிர்ச்சியாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும். துணியில் வடிகட்டிக் கொள்வது நல்லது. இந்த நீரில் ரோஜாப் பூ ஒன்றைப் போட்டு ஒரு மணிநேரம் வைத்திருந்து வடித்துப் பயன்படுத்தினால் மிக நல்லது.

**சூரிய ஒளிச் சிகிச்சை**

காலையில் 6 மணி முதல் 9 மணி வரை நேரங்களில், சூரியனை நோக்கிக் கண்களை மூடி நிற்க வேண்டும் இமைகளின்மேல் சூரிய ஒளி படல் வேண்டும். இதனை 2 முதல் 5 நிமிடங்கள் செய்யலாம். இந்த சூரிய ஒளிச்சிகிச்சை கண்களின் ஆரோக்கியத்தைக் கூட்டுகிறது.

களைப்புற்ற கண்களைச் சற்று நேரம் மூடிக் கொண்டிருந்து திறந்து பார்த்தால் பார்வை தெளிவையும், கண்களுக்கு ஒருவித புத்துணர்ச்சியையும் உணரலாம். கண்களை மூடிக் கொள்ளும் பொழுது உட்புகும் சிறிய ஒளியையும் தடுத்தால் கண்களுக்கு புத்துணர்ச்சி அதிகமாவதை உணரலாம்.

**நீராவிப் பயிற்சி**

நீரை ஆவி வரும்வரை கொதிக்க வைக்க வேண்டும். சில சொட்டுகள் நீலகிரித் தைலத்தையும் இதில் சேர்க்க வேண்டும். கண்களை இமைத்துக் கொண்டும், மூச்சை நன்றாக உள்ளிழுத்தும், வெளிவிட்டும் இந்த ஆவியை முகர்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் கண்தொற்று நோய்கள் வருவது தவிர்க்கப்பட வாய்ப்புகள் உண்டு.

**அதிகாலையில் எழுகல்**

சூரிய உதயத்திற்கு முன்பே எழுந்திருக்க வேண்டும் அதிகாலையில் எழுவதால் கண் ஒரே சீராக அதிகரிக்கும் ஒளியைப் பெறுகிறது. இதனால் கண் கெடுவதில்லை. நீண்ட நாள் நன்கு உழைக்கிறது.

நேரங்கழித்து எழுவதால் கண்ணில் திடீரென்று பிரகாசமான ஒளி பாய்கிறது. அதனால் கண்ணின் நுண்ணிய உறுப்புகள் அதிர்ச்சியடைகின்றன. கண் சீக்கிரம் கெட்டு விடுகிறது. இதனாலேயே முன்னோர் அதிகாலையில் எழுவதை வற்புறுத்திக் கூறி வந்திருக்கின்றனர்.

**எம்மால் அழுத்தி பிடிக்கப்படும்
எந்த ஒரு உறவும்
நீண்ட நாள் எம்முடன்
நிலைத்திருப்பதில்லை!!!**

அனைத்து
உணர்வுகளையும்
வெளிப்படுத்தும் மொழியாக
கவிதையிருக்க என் கவிதையை வெளிப்படுத்தும்
மொழியாகவே நீ இருக்கிறாய்!!!

**என்னை மீறியும் உனை நான்
நேசித்தேன்
எல்லை மீறியும் நேசித்தேன் அதனால்
தான் என்னவோ இன்று தன்னை மீறி என்
கண்கள் கலங்குகிறது!!!**

## தலை முடியின் வளர்ச்சி உதவும் கற்றாழை எண்ணெய்...!!

கற்றாழை பெண்களின் தலை முடியின் வளர்ச்சிக்கும் உதவுகிறது. தலைமுடியின் வளர்ச்சியை அதிகரிக்க, கற்றாழையில் எண்ணெய் தயாரித்து உபயோகப்படுத்தலாம். கற்றாழை மிகவும் அற்புதமான மூலிகைப் பொருள். இதில் ஏராளமான மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. இது உடல் ஆரோக்கியம் முதல் சருமம், தலைமுடி போன்றவற்றின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த வல்லது. தலைமுடி அதிகம் உதிரும் பிரச்சனை உள்ளவர்கள், கற்றாழை ஜெல்லைக் கொண்டு தலைமுடியைப் பராமரித்தால், தலைமுடி உதிர்வது நின்றுவிடும்.

கற்றாழையை கொண்டு எண்ணெய் தயாரித்து பயன்படுத்தலாம். ஆனால் கற்றாழை எண்ணெய் தயாரித்து வாரத்திற்கு 3 முறை பயன்படுத்தினால், மூன்றே மாதங்களில் தலைமுடி நன்கு வளர்ந்திருப்பதைக் காணலாம்.

தேவையான பொருட்கள்: கற்றாழை இலை, தேங்காய் எண்ணெய் 50 மிலி.

செய்முறை: முதலில் கற்றாழை இலையில் உள்ள ஜெல்லை தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். கற்றாழை ஜெல் மற்றும் தேங்காய் எண்ணெயை ஒன்றாக சேர்த்து நன்கு கலந்து, 2 நாட்கள் ஊற வைக்க வேண்டும். பின்பு ஊற வைத்துள்ள கற்றாழை ஜெல் கலவையை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, குறைவான தீயில் 10 நிமிடம் நன்கு கிளறி விட்டு சூடேற்றி, ஒரு பதத்திற்கு வந்ததும் இறக்கி குளிர வைத்து, வடிகட்டினால், கற்றாழை எண்ணெய் தயார்.

பயன்படுத்தும் முறை: கற்றாழை எண்ணெயை இரவில் படுக்கும் முன் தலையில் ஸ்கால்ப்பில் படும்படி நன்கு தடவி மசாஜ் செய்து, இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் மைல்டு ஷாம்பு போட்டு அலச வேண்டும். இப்படி செய்வதால், மயிர்கால்கள் ஊட்டம் பெற்று வலிமையடைந்து, அதன் வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படும்.



## உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுகளை வெளியேற்றும் ஒரேஞ் பழம் !!

பழங்களில் பலவகையான பழங்கள் இருக்கின்றன. அதில் அனைவரையும் கவர்ந்திழுக்கும் பழம் என்றால் அது ஒரேஞ் பழம் தான். ஒரேஞ் பழத்திற்கு கமலா பழம் என்ற வேறு ஒரு பெயரும் உண்டு.


ரத்த குழாய்களில் சேரும் கெட்ட கொழுப்பினை அகற்ற ஒரேஞ் பழம் பயன்படுகிறது. மேலும் இதய பிரச்னைகள் வராமல் தடுக்கிறது. ஜீரண சக்தியை அதிகப்படுத்தி உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுகளை வெளியேற்றுகிறது.

ஒரேஞ் பழத்தில் ப்ரோட்டீன், நார்ச்சத்துக்கள், வைட்டமின் சி, போலெட்ஸ், தையாமின், பொட்டாசியம், வைட்டமின் எ, கல்சியம், வைட்டமின் பி-6, மெக்னீசியம் போன்ற சத்துக்கள் அதிக அளவில் நிறைந்து காணப்படுகிறது.

ஒரேஞ் பழத்தில் உள்ள பொட்டாசியம் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும். உயர் இரத்த அழுத்த பாதிப்பு ஏற்படாமல் பாதுக்கிறது. முடி கொட்டுவது குறைந்து முடியின் வளர்ச்சியை அதிபடுத்துகிறது.

ஒரேஞ் பழத்தில் உள்ள ஆன்டிஆக்ஸிடண்ட்ஸ் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய் வராமல் தடுக்கிறது. ஒரேஞ் பழத்தில் உடலுக்குத் தேவையான அனைத்து உயிர்ச்சத்துக்களும் நிறைந்துள்ளன.

உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் தினமும் காலை உணவு சாப்பிடும் முன் ஒரேஞ் பழத்தை ஜூஸாக குடித்து வருவது நல்லது. ஒரேஞ் பழத்தில் அதிக அளவில் உள்ள வைட்டமின் சி உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது.



07ஆம் பக்க தொடர்ச்சி..

| | | | |
|---|---|---|---|
| 97 | தம்பிராய் சந்தை படுகொலை | 17.05.1996 | 7 |
| 98 | மல்லாவி படுகொலை | 24.07.1996 | 9 |
| 99 | வவுனிக்குளம் படுகொலை | 26.09.1996 | 4 |
| 100 | கோணாவில் படுகொலை | 27.09.1996 | 5 |
| 101 | முள்ளி வாய்க்கால் படுகொலை | 13.05.1997 | 9 |
| 102 | மாங்குளம் படுகொலை | 08.06.1997 | 7 |
| 103 | அக்கராயன் மருத்துவமனை படுகொலை | 15.07.1997 | 3 |
| | | 15.08.1997 | 15 |
| 104 | தம்பல காமம் படுகொலை | 01.02.1998 | 8 |
| 105 | பழையவட்டக்கச்சி படுகொலை | 26.03.1998 | 6 |
| 106 | சுதந்திரபுரம் படுகொலை | 10.06.1998 | 33 |
| 107 | விசுவமடு படுகொலை | 25.11.1998 | 6 |
| 108 | சுண்டிக்குளம் படுகொலை | 02.12.1998 | 7 |
| 109 | மந்துவில் படுகொலை | 15.09.1999 | 29 |
| 110 | பாலிநகர் படுகொலை | 03.09.1999 | 25 |
| 111 | பாலிநகர் படுகொலை | 03.11.1999 | 6 |
| 112 | மடு தேவாலய படுகொலை | 20.11.1999 | 44 |
| 113 | பிந்துநுவேவ படுகொலை | 25.10.2000 | 28 |
| 114 | மிருசுவில் படுகொலை | 19.12.2000 | 9 |
| 115 | பேசாலை வீட்டு திட்ட படுகொலை | 23.12.2005 | 4 |
| 116 | திருகோணமலை மாணவர் படுகொலை | 02.01.2006 | 5 |
| 117 | மானிப்பாய் குடும்ப படுகொலை | 24.01.2006 | 3 |
| 118 | திருகோணமலை படுகொலை | 12.04.2006 | 15 |
| 119 | கொம்புவைத்தகுளம் படுகொலை | 13.04.2006 | 3 |
| 120 | புத்தூர் படுகொலை | 18.04.2006 | 5 |
| 121 | மூதூர் குண்டுவெடிப்பு | 25.04.2006 | 12 |
| 122 | உதயன் பத்திரிகை தாக்குதல் | 02.06.2006 | 2 |
| 123 | நெல்லியடி படுகொலை | 04.05.2006 | 7 |
| 124 | மதுவில் கோவில் படுகொலை | 06.05.2006 | 8 |
| 125 | அல்லைபிட்டி படுகொலை | 13.05.2006 | 13 |
| 126 | வடமுனைக் கண்ணிவெடி படுகொலை | 07.06.2006 | 10 |
| 127 | வங்காலை குடும்பம் படுகொலை | 08.06.2006 | 4 |
| 128 | கைதடி மனித புதைகுழி | ஜூன் 2006 | 4 |
| 129 | பேசாலை தேவாலய படுகொலை | 17.06.2006 | 4 |
| 130 | மயிலம்பாவெளி படுகொலை | 27.06.2006 | 3 |
| 131 | முசலி படுகொலை | 28.06.2006 | 3 |
| 132 | அக்சம்பெயிம் தன்னார்வ தொண்டு நிறுவன படுகொலை | 05.08.2006 | 17 |
| 133 | நெடுங்கேணி ஆம்புலன்ஸ் தாக்குதல் | 08.08.2006 | 5 |
| 134 | அல்லைபிட்டி ஏவுகணை தாக்குதல் | 13.08.2006 | 12 |
| 135 | செஞ்சோலை குண்டுவீச்சு | 14.08.2006 | 54 |
| 136 | பொத்துவில் படுகொலை | 17.09.2006 | 10 |
| 137 | புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு | 16.10.2006 | 4 |
| 138 | கிளிநொச்சி மருத்துவமனை குண்டுவீச்சு | 02.11.2006 | 5 |
| 139 | வவுனியா விவசாய கல்லூரி மாணவர் படுகொலை | 18.11.06 | 4 |
| 140 | கிழக்கு பகுதி படுகொலை | 08,12.2006 | 184 |
| 141 | படகுத்துறை படுகொலை | 02.01.2007 | 15 |
| 142 | மன்னார் கல்வியாளர்கள் படுகொலை | 27.02.2007 | 2 |
| 143 | படுவான்கரை படுகொலை | 8,9.03.2007 | 5 |
| 144 | சித்தாண்டி படுகொலை | 29.03.2007 | 6 |
| 145 | செங்கலடி படுகொலை | 14.04.2007 | 5 |
| 146 | சிலாவத்துறை கிளைமோர் தாக்குதல் | 02.09.2007 | 5 |
| 147 | பெரியமடு ஏவுகணை தாக்குதல் | 25.10.2007 | 15 |
| 148 | ரெட்டை செம்மணிகுலம் படுகொலை | 11.11.2007 | 3 |
| 149 | தர்மபுரம் குண்டுவீச்சு | 25.11.2007 | 5 |
| 150 | ஐயன்கன்குளம் கிளைமோர் தாக்குதல் | 27.11.2007 | 9 |
| 151 | புலிகளின் குரல் வானொலி நிலைய தாக்குதல் | 27.11.2007 | 10 |
| 152 | தட்சனமடு கிளைமோர் தாக்குதல் | 29.01.2008 | 20 |
| 153 | கிராஞ்சி குண்டுவீச்சு | 22.02.2008 | 9 |
| 154 | முறிகண்டி கிளைமோர் தாக்குதல் | 23.05.2008 | 16 |
| 155 | புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு | 15.06.2008 | 4 |
| 156 | மட்டக்களப்பு படுகொலை | 11.07.2008 | 4 |
| 157 | வட்டமடு படுகொலை | 16.10.2008 | 4 |
| 158 | கல்முனை படுகொலை | 02.11.2008 | 5 |
| 159 | மட்டக்களப்பு படுகொலை | 26.11.2008 | 80 க்கும் மேல் |
| 160 | வன்னி படுகொலை | 31.12.2008 | 5 |
| 161 | முரசுமோட்டை படுகொலை | 01.01.2009 | 5 |
| 162 | முரசுமோட்டை படுகொலை | 01.01.2009 | 10 |
| 163 | முல்லைத்தீவு படுகொலை | 02.01.2009 | 4 |
| 164 | தர்மபுரம் சந்தி படுகொலை | 08.01.2009 | 7 |
| 165 | புதுக்குடியிருப்பு தாக்குதல் | 11.01.2009 | 4 |
| 166 | புதுக்குடியிருப்பு தாக்குதல் | 16.01.2009 | 5 |
| 167 | புதுக்குடியிருப்பு மற்றும் விசுவமடு தாக்குதல் | 18.01.2009 | 4 |
| 168 | முல்லைத்தீவு தாக்குதல் | 18.01.2009 | 18 |
| 169 | வன்னி படுகொலை | 20.01.2009 | 15 |
| 170 | முல்லைத்தீவு படுகொலை | 22.01.2009 | 5 |
| | | 23.01.2009 | 5 |
| 171 | உடையார்கட்டு படுகொலை | 24.01.2009 | 12 |
| 172 | சுதந்திரபுரம் படுகொலை | 25.01.2009 | 21 |
| 173 | வன்னி படுகொலை | 28.01.2009 | 100 க்கும் மேல் |
| 174 | உடையார்கட்டு படுகொலை | 28.01.2009 | 69 |
| 175 | வன்னி படுகொலை | 29.01.2009 | 44 |
| 176 | மூங்கிலாறு மற்றும் சுதந்திரபுரம் படுகொலை | 31.01.2009 | 39 |
| 177 | மூங்கிலாறு படுகொலை | 1.02.2009 | 13 க்கும் மேல் |
| 178 | உடையார்கட்டு படுகொலை | 02.02.2009 | 9 |
| | | 04.02.2009 | 50 க்கும் மேல் |
| 179 | சுதந்திரபுரம் மற்றும் இருட்டுமெடு படுகொலை | 05.02.2009 | 5 |
| 180 | புதுக்குடியிருப்பு படுகொலை | 05.02.2009 | 100 க்கும் மேல் |
| 181 | புதுக்குடியிருப்பு படுகொலை | 07.02.2009 | 61 |
| 182 | மாத்தளன் படுகொலை | 10.02.2009 | 36 க்கும் மேல் |
| 183 | புதுமாத்தான் படுகொலை | 11.02.2009 | 16 |
| 184 | தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் படுகொலை | 14.02.2009 | 75 க்கும் மேல் |
| | | 16.02.2009 | 260 |
| 185 | மாத்தளன் படுகொலை | 18.02.2009 | 108 |
| 186 | ஆனந்தபுரம் படுகொலை | 18.02.2009 | 50க்கும் மேல் |
| 187 | இரானைப்பாலை படுகொலை | 19.02.2009 | 30குடும்பங்கள் |
| 188 | வன்னி பகுதிகளில் படுகொலை | 21.02.2009 | 13 |
| | | 22.02.2009 | 39 |
| 189 | புதுமாத்தான் படுகொலை | 24.02.2009 | 6 |
| 190 | முல்லைத்தீவு படுகொலை | 28.02.2009 | 40 |
| | | 01.03.2009 | 37 |
| 191 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 02.03.2009 | 45 |
| 192 | மாத்தளன் தற்காலிக மருத்துவமனை படுகொலை | 03.03.2009 | 13 |
| 193 | முல்லைத்தீவு படுகொலை | 04.03.2009 | 73 |
| 194 | பொக்கனை படுகொலை | 04.03.2009 | 25 |
| 195 | மாத்தளன் படுகொலை | 04.03.2009 | 23 |
| 196 | இரட்டை வாய்க்கால் படுகொலை | 04.03.2009 | 10 |
| 197 | இரானைப்பாலை படுகொலை | 04.03.2009 | 23 |
| 198 | ஆனந்தபுரம் படுகொலை | 05.03.2009 | 69 |
| 199 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 06.03.2009 | 86 |
| 200 | மாத்தளன் படுகொலை | 07.03.2009 | 53 |
| 201 | முல்லைத்தீவு படுகொலை | 08.03.2009 | 71 |
| 202 | அம்பைவன் பொக்கனை படுகொலை | 09.03.2009 | 74 |
| 203 | வன்னி பகுதிகளில் படுகொலை | 10.03.2009 | 129 |
| 204 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 11.03.2009 | 62 |
| 205 | முல்லைத்தீவு படுகொலை | 14.03.2009 | 69 |
| 206 | வன்னி பகுதிகளில் தாக்குதல் | 15.03.2009 | 29 |
| | | 16.03.2009 | 32 |
| | | 17.03.2009 | 58 |
| 207 | பச்சைப்புல் மேட்டை, வலைஞர் மடம் படுகொலை | 17.03.2009 | 52 |
| 208 | பொக்கனை, மாத்தளன் படுகொலை | 19.03.2009 | 39 |
| 209 | முல்லைத்தீவு படுகொலை | 20.03.2009 | 45 |
| 210 | மாத்தளன் படுகொலை | 20.09.2009 | 15 |
| 211 | வன்னி பகுதிகளில் தாக்குதல் | 21.09.2009 | 42 |
| 212 | புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை படுகொலை | 22.09.2009 | 32 |
| 213 | புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை படுகொலை | 23.09.2009 | 96 |
| 214 | வலைஞர்மடம் படுகொலை | 24.09.2009 | 62 |
| 215 | பொக்கனை படுகொலை | 25.09.2009 | 49 |
| 216 | மாத்தளன் படுகொலை | 26.09.2009 | 17 |
| 217 | மாத்தளன் படுகொலை | 25.03.2009 | 65 |
| 218 | புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை | 26.03.2009 | 5 |
| 219 | பொக்கனை, மாத்தளன் படுகொலை | 27,28.03.2009 | 179 |
| 220 | மாத்தளன் படுகொலை | 29.03.2009 | 17 |
| 221 | பொக்கனை படுகொலை | 29.03.2009 | 18 |
| 222 | வலைஞர்மடம் படுகொலை | 29.03.2009 | 15 |
| | | 30.03.2009 | 88 |
| 223 | அம்பலவன் பொக்கனை மற்றும் வலைஞர்மடம் படுகொலை | 31.03.2009 | 45 |
| 224 | பொக்கனை படுகொலை | 29.03.2009 | 18 |
| 225 | புதுமாத்தளன் | 1.04.2009 | 33 |
| 226 | புதுமாத்தளன் | 02.04.2009 | 31 |
| 227 | புதுமாத்தளன் | 03.04.2009 | 25 |
| 228 | புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை | 04.04.2009 | 71 |
| 229 | பொக்கனை படுகொலை | 08.04.2009 | 129 |
| 230 | வன்னி பகுதிகளில் தாக்குதல் | 09.04.2009 | 52 |
| | | 10.04.2009 | 12 |
| 231 | புல்மோட்டை படுகொலை | 11.04.2009 | 17 |
| 232 | வன்னி பகுதி தாக்குதல் | 12.04.2009 | 30 |
| | | 13.04.2009 | 23 |
| 233 | முல்லைத்தீவு படுகொலை | 16.04.2009 | 57 |
| 234 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 17,18.04.2009 | 60 |
| 235 | வலைஞர்மடம் படுகொலை | 21.04.2009 | 7 |
| 236 | வலைஞர்மடம் படுகொலை | 23.04.2009 | 14 |
| 237 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 26.04.2009 | 04 |
| | | 29.04.2009 | 09 |
| | | 02.05.2009 | 64 |
| 239 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 09.05.2009 | 1200 |
| 240 | முள்ளிவாய்க்கால் படுகொலை | 10,11.05.2009 | 3200 |
| 241 | தர்மகுலசிங்கம் படுகொலை | 12.05.2009 | 47 |
| 242 | இறுதிப்போர் படுகொலைகள் | மே 2009 முதல் இன்று வரை கணக்கில்லை | |

ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் வரை கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தி மறைந்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரை விசாரிக்கும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமும் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டம் குறித்து நாம் அரசிடம் முன்வைத்தபோதும் கிடைக்கப்பெறாத சூழலில் ஜனநாயக ரீதியிலானப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இத்தகையதொரு காலகட்டத்தில் விடுதலைப்புலிகளுடைய ஆயுதப்போராட்டமும் மௌனிக்கப்பட்டுள்ள நிலையில் ஒட்டுமொத்தமாக இலங்கையில் ஆயுதக்குழுக்களின் தலையீடுகள் இல்லாத நிலையில், 12 ஆண்டுகள் யுத்தம் முடிவடைந்து நிறைவடைந்துள்ள நிலையிலும் எமக்கானத் தீர்வினை இலங்கையரசு பெற்றுத்தரவில்லை என்றால், அஹிம்சை வழியில் நாம் ஒன்றிணைந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அந்தப் போராட்டத்தை ஒரு சில தமிழ்க் கட்சிகள் கையிலெடுத்து செயற்படுகின்றனர். ஏனையவர்கள் அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப செயற்பட்டு தொடர்ந்தும் தமிழ் மக்களுடைய தீர்வுத்திட்டத்தை குழப்புகின்றவர்களாகவே இருந்து வருகின்றனர்.

2022ஆம் வருடத்திலாவது தமிழ் மக்களுக்கானதொரு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கை இல்லாதிருக்கின்ற நிலையில் இராணுவ ஆட்சியை மையப்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் காய்நகர்த்தல்கள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. முதலாவதாக கொவிட் வைரசின் தாக்கம், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, விவசாயிகளின் உரப்பிரச்சினை, வேலைவாய்ப்பின்மை, வரி சம்பந்தப்பட்ட விடயங்கள், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் போன்றவை இந்த அரசாங்கத்தை மேலும் கொண்டுசெல்வதா அல்லது ஒரு இராணுவ மயமாக்கலை உருவாக்கி அதனுடன் பயணிப்பதா என்கிற நிலையில் இவ்வரசாங்கம் செயற்படுகின்றது. நல்லாட்சி என்கின்ற அரசாங்கம் தமிழ் – சிங்கள இனத்திற்கு செய்த வரலாற்றுத் துரோகம் என்னவென்றால் நம்பவைத்துக் கழுத்தறுத்தது மாத்திரமே. ஆட்சிபீடமேறிய கோட்டாபய ராஜபக்ச அவர்கள் இதுவரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ்த் தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தவில்லை. ஆனால் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள், தூதுவர்கள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். ஆகவே சர்வாதிகாரப் போக்குடைய இவ்வரசாங்கத்தை இல்லாதொழிக்கவேண்டும் அல்லது அரங்கில் இருந்து அப்புறப்படுத்தவேண்டும் என்று மாற்றுக்கட்சிகள் தொழிற்படுகின்றன.

30 ஆண்டுகள் தொடர்ந்தும் மாற்றங்களை உருவாக்கி ஏமாற்றம் கண்டதே வரலாறு. ஆகவே இருக்கின்ற இவ் ஆட்சியாளர்களை வைத்து எமக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நகர்வுகளை நாம் துரிதகதியில் செயற்படுத்தவேண்டும். தற்போது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து 13க்கு அப்பால் சென்று எமக்கு தீர்வு வழங்கவேண்டும், மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்கிற விடயங்கள் வரவேற்கத்தக்கது. ஆனால் இவற்றைக் குழப்புவதற்கு அரச கைக்கூலிகளாக செயற்படுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் கட்சிகளின் செயற்பாடுகள் வேதனைக்குரியது. இவர்களே எமது இனத்தின் துரோகிகள்.

ஆகவே சிறுபான்மை இனத்தவர்களாக இருக்கக்கூடிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தால் இந்த அரசு ஆட்டங்காணும் சூழ்நிலை உருவாகும். மீண்டும் மீண்டும் வரலாறுகளைக் கூறி அதனை மிகைப்படுத்தி எழுதுகின்ற பல ஊடகங்கள் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்குகின்றவைகளாகவே தற்போதும் செயற்படுகின்றன. இந்த நாட்டில் மாற்றம் ஒன்று இடம்பெறவேண்டுமாகவிருந்தால் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த குரலாக இன மத மொழி வேறுபாடின்றி அனைத்துத் தமிழ்த் தரப்பும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம். ஒன்றிணையத் தவறுகின்ற கட்சிகளின் தலைமைகள் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான ஒன்றிணைந்த தீர்வினை பெற்றுக்கொள்கின்ற சூழ்நிலை உருவாகும். இல்லையெனில் மீண்டும் 1983 ஜூலைக் கலவரத்தினை நோக்கி தமிழினம் தள்ளப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.



# விளையாட்டு செய்திகள்



## வடமாகாண கராத்தே போட்டியில் NIPPON KENSANKAI KARATE ASSOCIATION மாணவர்கள் சாதனை



நடைபெற்ற வட மாகாண திறந்த **(Open)** கராத்தே சுற்றுப்போட்டியில் ஷிஹான் அசனார் வவுனியா மாவட்ட NIPPON KENSANKAI KARATE ASSOCIATION மாணவர்கள் வெற்றியீட்டி 2 தங்கம், 1 வெள்ளி மற்றும் 13 வெண்கலப்பதக்கங்கள் உள்ளடங்களாக 16 பதக்கங்கள் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

விஷேடமாக கருப்புப்பட்டி மாணவர்களான றினாஸ் மொஹிதீன், அலக்சிகா போன்றோர் தலா 3 பதக்கங்கள் வீதம் பெற்றுக் கொண்டனர். ஷிஹான் அசனார் இலங்கை கராத்தேயில் மிகவும் சிரேஷ்ட ஆசான்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





## கிரிக்கெட் அணியில் இடம் பிடித்த அர்ஜீன் டெண்டுல்கர்!

மும்பை ரஞ்சி அணியில் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜீன் டெண்டுல்கர் இடம்பிடித்துள்ளார். இந்த வருட ரஞ்சி கிண்ண போட்டிக்கான மும்பை அணி இளம் வீரர் பிருத்வி ஷா தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜீன் டெண்டுல்கர் இடம்பெற்றுள்ளார். ரஞ்சி கிண்ண போட்டியில் எலைட் குரூப் சி பிரிவில் இடம்பெற்றுள்ள மும்பை அணி, ஜனவரி 13 அன்று மஹாராஷ்டிரத்துக்கு எதிராக தனது முதல் ஆட்டத்தை விளையாடுகிறது.

22 வயது இடது கை வேகப்பந்து வீச்சாளரான அர்ஜீன் டெண்டுல்கர், கடந்த வருடம் சையத் முஷ்டாக் அலி கிண்ண போட்டிக்கான மும்பை அணியில் இடம்பெற்றார். அர்ஜீன் விளையாடிய இரு ஆட்டங்களிலும் மும்பை அணிக்குத் தோல்வியே கிடைத்தன. ஹரியாணாவுக்கு எதிராக 1/34, புதுச்சேரிக்கு எதிராக 1/33 என சுமாராகவே பந்துவீசினார். இதன்பிறகு ஐபிஎல் ஏலத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி, அர்ஜீனை ரூ. 20 லட்சத்துக்குத் தேர்வு செய்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் பயிற்சியில் ஈடுபட்டபோது அவருக்குக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து ஓர் ஆட்டத்திலும் விளையாட முடியாமல் ஐபிஎல் போட்டியிலிருந்து விலகினார். இந்திய அணியின் வலைப்பயிற்சி பந்துவீச்சாளராகப் பணியாற்றியுள்ள அர்ஜீன், இந்திய A-19 அணிக்காகவும் விளையாடியுள்ளார். 2018-ல் பிருத்வி ஷா தலைமையில் இந்திய அணி A-19 உலகக் கிண்ணத்தை வென்றது. கடந்த வருடம் மும்பை அணிக்குத் தலைமை தாங்கி விஜய் ஹசாரே கோப்பைப் போட்டியை வென்றார். இதையடுத்து முதல்முறையாக ரஞ்சி கிண்ண போட்டியில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மும்பை அணியில் யாஷஸ்வி ஜெயிஸ்வால், சர்பராஸ் கான், ஆதித்யா தரே, ஷிவம் டுபே, தவால் குல்கர்னி போன்ற பிரபல வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள்.



## கொரோனாவால் பாதிக்கப்பட்ட கங்குலி நிலை?

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள பிசிசிஐ தலைவர் சௌரவ் கங்குலியின் உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை தகவல் அளித்துள்ளது.

பிசிசிஐ தலைவர் சௌரவ் கங்குலி கொரோனாவால் பாதிக்கப்பட்டதை அடுத்து கொல்கத்தாவில் உள்ள உட்லேண்ட்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிறன்று அவருக்கு லேசாகக் காய்ச்சல் அடித்தது. உடனடியாக கொரோனா பரிசோதனை மேற்கொண்டார்.

அதில், கொரோனா பாதிப்பு உறுதியானது. இந்த வருடம் ஏற்கெனவே இருமுறை இதய அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டு சிகிச்சை எடுப்பதற்குப் பதிலாக மருத்துவமனைக்குச் செல்லவேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள். இதனால் திங்கள் அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கங்குலி, கொரோனா தடுப்பூசியை ஏற்கெனவே செலுத்திக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் கங்குலியின் உடல்நிலை குறித்து உட்லேண்ட்ஸ் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது. கங்குலியின் உடல்நிலை சீராக உள்ளது. ஆக்ஸிஜன் அளவு சரியாக உள்ளது. நேற்றிரவு நன்குத் தூங்கினார். காலை, மதிய உணவுகளை உட்கொண்டார். மருத்துவர்கள் அவருடைய உடல்நிலையைத் தீவிரமாகக் கவனித்து வருகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

சௌரவ் கங்குலிக்கு கடந்த ஜனவரி 2 ஆம் திகதி லேசான நெஞ்சு வலி ஏற்பட்டதை அடுத்து, உட்லேண்ட்ஸ் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் அவருக்கு இதயத்தில் உள்ள 3 தமனிகளில் அடைப்பு இருந்தது தெரியவந்தது. அதில், ஒரு அடைப்பு ஸ்டென்ட் குழாய் பொருத்தப்பட்டு, அகற்றப்பட்டது. ஐந்து நாள் சிகிச்சைக்குப் பிறகு, கங்குலி வீடு திரும்பினார்.

அதே மாதத்தில் கங்குலிக்குக் மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டதன் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மீண்டும் ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவரின் இதயத் தமனிகளில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரிசெய்ய மேலும் 2 ஸ்டென்ட்கள் பொருத்தப்பட்டன.



## இங்கிலாந்து 'ஹாட்ரிக்' தோல்வி!

ஆஷஸ் தொடரின் 'பாக்ஸிங் டே' டெஸ்டில் இங்கிலாந்தை இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்திரேலியா, தொடரை கைப்பற்றியது. மொத்தம் 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில், தற்போது 3 இல் அந்த அணி வென்றிருக்கிறது. 3 ஆவது நாளான செவ்வாய்க்கிழமை இங்கிலாந்து தனது 2 ஆவது இன்னிங்ஸில் 68 ஓட்டங்களுக்கு சுருண்டதால் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

அணியின் தலைவர் ஜோ ரூட் மட்டும் சற்று முனைப்பு காட்ட, இதர விக்கெட்டுகள் ஒற்றை இலக்க ஓட்டங்களிலும், டக் அவுட்டாகியும் வீழ்ந்தன. அவுஸ்திரேலிய தரப்பில் அசத்தலாக பந்துவீசி இங்கிலாந்து பேட்டிங் வரிசையை சரித்தார் ஸ்காட் போலண்ட். முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியை வென்ற அவுஸ்திரேலியா களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 65.1 ஓவர்களில் 185 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அணியின் தரப்பில் அதிகபட்சமாக ஜோ ரூட் 4 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்கள் சேர்க்க, அவுஸ்திரேலிய பௌலிங்கில் பேட் கம்மின்ஸ், நேதன் லயன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் சரித்தனர். பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா, 87.5 ஓவர்களில் 267 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டது. அதிகபட்சமாக மார்கஸ் ஹாரிஸ் 7 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்கள் அடிக்க, இங்கிலாந்து பௌலிங்கில் ஜேம்ஸ் ஆண்டர்சன் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து முதல் இன்னிங்ஸில் 82 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து, திங்கள்கிழமை ஆட்டநேர முடிவில் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்திருந்தது.

செவ்வாய்க்கிழமை ஆட்டத்தை ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ் தொடர்ந்தனர். இதில் ஸ்டோக்ஸ் 2 பவுண்டரிகளுடன் 11 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது ஸ்டார்க் வீசிய 17 ஆவது ஓவரில் பௌல்டானார். அடுத்து வந்த ஜானி பேர்ஸ்டோவை 5 ஓட்டங்களுக்கு எல்பிடபிள்யூ செய்தார் 23 ஆவது ஓவர் வீசிய போலண்ட். 8 ஆவது வீரராக ஜோஸ் பட்லர் களம் புக, அதுவரை நிதானமாக ஆடி வந்த கேப்டன் ரூட் விக்கெட்டை இழந்தார்.

4 பவுண்டரிகளுடன் 28 ஓட்டங்கள் சேர்த்த அவர் போலண்ட் வீசிய 25 ஆவது ஓவரில் வார்னரிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். அடுத்து வந்த மார்க் வுட், ஆலி ராபின்சன் ஆகியோரது விக்கெட்டை 27 ஆவது ஓவரில் எடுத்தார் போலண்ட். கடைசியாக ஜேம்ஸ் ஆண்டர்சனை 2 ஓட்டங்களுக்கு 28 ஆவது ஓவரில் கேமரூன் கிரீன் பௌல்ட் செய்ய, ஆட்டம் முடிவுக்கு வந்தது அவுஸ்திரேலிய பௌலிங்கில் ஸ்காட் போலண்ட் 6, மிட்செல் ஸ்டார்க் 3, கேமரூன் கிரீன் 1 விக்கெட் வீழ்த்தினர்.



# உலக பார்வை



## தங்க சுரங்கத்தில் பலியான 38 பேர்!

சூடானில் உள்ள தங்க சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 38 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சூடான் நாட்டின் தலைநகரான கார்டோமின் மேற்குப் பகுதியில் தங்க சுரங்கம் அமைந்துள்ளது. இந்த தங்க சுரங்கம் மூடப்பட்டு செயல்படாமல் இருந்து வந்தது.

இந்நிலையில், மூடப்பட்டிருந்த தங்க சுரங்கத்தில் சென்று சிலர் தங்கம் எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அந்த சுரங்கத்தின் மேற்கூரை இடிந்து விபத்தில் சிக்கியது. இதில் பலர் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் 38 பேரின் உடல்களை மீட்டனர். காயமடைந்த பலரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

## சோமாலிய பிரதமர் ஜனாதிபதியால் பதவி நீக்கம்



சோமாலியாவின் பிரதமர் Mohamed Hussein Roble பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அந்நாட்டு ஜனாதிபதி Mohamed Abdullahi Farmajo பிரதமரைப் பதவியிலிருந்து நீக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட முயற்சிப்பதாக பிரதமர் குற்றஞ்சாட்டியிருந்ததுடன், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுமாறு அந்நாட்டு பாதுகாப்பு படையினருக்கு பிரதமர் உத்தரவிட்டிருந்தார்.

இருப்பினும், ஜனாதிபதிக்கு ஆதரவாக செயற்படும் பாதுகாப்புப் படை பிரதமரை அவரது அலுவலகத்திற்குள் செல்லவிடாது தடுத்துள்ளதாக பிரதமரின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனிடையே ஆட்சி அதிகாரத்திற்காக இந்த இரு தலைவர்களும் எடுத்துள்ள நடவடிக்கைகளால் நாட்டின் ஸ்திரத்தன்மை தொடர்பில் கேள்வி எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவு!

வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த வாரம் ஒரு முக்கிய ஆளும் கட்சிக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.

கொரியாவின் தொழிலாளர் கட்சியின், 8ஆவது மத்திய குழுவின் 4ஆவது முழுமையான கூட்டம் திங்கட்கிழமை கூட்டப்பட்டது.

தொற்றுநோய் எதிர்ப்பு முடக்கநிலை, அணு ஆயுதத் திட்டம் மற்றும் இயற்கை பேரழிவுகள் மீதான சர்வதேச தடைகள் ஆகியவற்றால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளை வட கொரியா எதிர்கொள்ளும் போது கட்சி மற்றும் அரசாங்க அதிகாரிகளின் கூட்டம் நடக்கின்றது.

இந்த வார சந்திப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை. ஆனால், 2019இல், ஒரு முழுமையான கூட்டம் நான்கு நாட்கள் நடைபெற்றது.

கிம்மின் தந்தையும் நீண்டகால ஆட்சியாளருமான கிம் ஜோங் இல் டிசம்பர் 2011இல் இறந்ததிலிருந்து, கிம் ஜோங் உன், நாட்டின் முழுமையான அதிகாரத்தை நிறுவி வட கொரியாவின் அணு மற்றும் ஏவுகணை ஆயுதங்களை பலப்படுத்தினார்.

2021ஆம் ஆண்டிற்கான பிரதான கட்சி மற்றும் மாநிலக் கொள்கைகளை செயற்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காகவே இந்த முழுமையான கூட்டம் என்று கே.சி.எச்.ஏ. அறிக்கை தெரிவித்துள்ளது.

வடகொரியாவுடனான உறவுகளைக் கையாளும் தென் கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகம் திங்களன்று, 'வட கொரியா சர்வதேச சமூகத்துடன் உரையாடலுக்கான கதவைத் திறப்பதன் மூலம் புதிய ஆண்டைத் தொடங்கும் என்று நம்புகிறோம்' என தெரிவித்துள்ளது.

## ஒமிக்ரோன் பரவல் வேகம் அபாய கட்டத்தை எட்டியுள்ளது

கொரோனா வைரஸ் தொற்று 2019 இறுதியில் உலகம் முழுவதும் பரவ தொடங்கியது. ஓரளவு கட்டுக்குள் வந்த நிலையில், திடீரென உருமாற்றம் அடைந்தது. ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா என உருமாற்றம் அடைந்த வைரஸ்க்கு பெயர்கள் சூட்டப்பட்டன.

இதில் இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு டெல்டா எனப் பெயரிடப்பட்டது. இந்த வைரஸ் மற்ற உருமாற்றம் அடைந்த வைரஸ் தொற்றுகளை விட வீரியம் மிக்கதாக இருந்ததால், இந்தியாவில் 2-வது அலை உருவானது. சில வெளிநாடுகளையும் புரட்டி போட்டது.

இதற்கிடையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் பணத்தை தண்ணீராக செலவழித்து தடுப்பூசிகளை செலுத்தும் பணியை துரிதப்படுத்தியது.

மே மாதத்திற்கு பிறகு ஓரளவு கொரோனா பாதிப்பு கட்டுக்குள் வந்தது. இதனால் கொரோனா வைரஸ் தொற்றின் வீரியம் குறைந்து அப்படியே மறைந்து விடும் என மக்கள் நினைத்தனர்.

அந்த நிலையில்தான் கடந்த மாதம் தென்ஆப்பிரிக்காவில் ஒமிக்ரோன் என்ற உருமாற்றம் வைரஸ் கண்டறியப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் இந்த வைரஸ் டெல்டாவை விட வீரியம் மிக்கது, பரவும் தன்மை அதிகம், தடுப்பூசிகளின் செயல்திறனை குறைக்கிறது என ஆய்வில் தெரியவந்தது.

இந்த நிலையில்தான் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் தற்போது கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறை கொண்டாட்டம் களைகட்டியுள்ளது. மக்கள் கூட்டம் கூட்டாக வெளியில் சுற்றும் நிலையில், ஒமிக்ரோன் பாதிப்பு அதிகரிக்க தொடங்கியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டனில் தினசரி கொரோனா பாதிப்பு ஒரு லட்சத்தை தாண்டிய வண்ணம் உள்ளது. இந்த நிலையில் மாறுபாடு அடைந்த ஒமிக்ரோன் தொற்று பரவல் வேகம் அபாய கட்டத்தை எட்டியுள்ளது. டெல்டா வைரசை விட ஒமிக்ரோன் பரவல் விகிதம் பல்வேறு நாடுகளில் அதிகரித்துள்ளது என உலக சுகாதார மையம் எச்சரித்துள்ளது.

## நடுவானில் உடைந்த விமானத்தின் கண்ணாடி!

பிரிட்டனைச் சேர்ந்த விமானம் 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த போது அதன் கண்ணாடி உடைந்தது. இந்த சம்பவத்தில் விமானப் பயணிகள் 200 பேர் உயிர் தப்பினர்.



பிரிட்டன் தலைநகர் லண்டனிலிருந்து பயணிகள் விமானம் ஒன்று கோஸ்டாரிகா நாட்டில் உள்ள சான் ஜோஸ் நகருக்கு கிறிஸ்துமஸ் தினத்தில் சென்று கொண்டிருந்தது. 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது, அந்த விமானத்துக்கு மேலாக 1000 அடி உயரத்தில் பறந்த மற்றொரு விமானத்திலிருந்து பிரிட்டன் விமானத்தின் முன்புற கண்ணாடியில் பனிக்கட்டி குவியல் விழுந்தது.

இதில், இரு அங்குல தடிமன் கொண்ட கண்ணாடியில் பலத்த விரிசல் விழுந்தது. இந்த சம்பவத்தில் பயணிகள் காயமின்றி தப்பினர்.

கண்ணாடியில் விரிசல் விழுந்தபோதும் விமானத்தை சான் ஜோஸ் நகரில் விமானிகள் பத்திரமாக தரையிறக்கினர்.

## கடலில் எண்ணெய் கசிவு வழக்கு – கெப்டனுக்கு 20 மாதங்கள் சிறைத்தண்டனை

மொரிசியஸ் கடலில் கடந்த 2020ம் ஆண்டு ஜுலை மாதம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த எம்.வி.வாகாஷியோ என்ற எண்ணெய்க் கப்பல் விபத்துக்குள்ளானது. கப்பல் உடைந்து அதில் இருந்த எண்ணெய் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறி கடலில் கலந்தது. ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் வாழும் கடலில் ஆயிரம் டன் எண்ணெய் கலந்ததால் கடலின் சுற்றுச்சூழல் கடுமையாக மாசடைந்தது.



இது தொடர்பாக கப்பல் கேப்டன் சுனில் குமார் நந்தேஸ்வர், இரண்டாம் நிலை அதிகாரி (துணை கேப்டன்) ஜனேந்திர திலகரத்ன ஆகியோர் மீது மொரிசியஸ் தீவின் போர்ட் லூயிஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணையின்போது, கப்பலில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் மது அருந்தியதை கேப்டன் சுனில் குமார் ஒப்புக்கொண்டதுடன், மன்னிப்பும் கேட்டார். துணை கேப்டனும் தவறை ஒப்புக்கொண்டார்.

வாதப் பிரதிவாதங்கள் அனைத்தும் முடிவடைந்த நிலையில், கேப்டன் மற்றும் துணை கேப்டன் இருவரும் குற்றவாளிகள் என கடந்த வாரம் நீதிமன்றம் அறிவித்தது.

அவர்களுக்கான தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்பட்டது. குற்றவாளிகளான கேப்டன் சுனில் குமார் நந்தேஸ்வர், துணை கேப்டன் ஜனேந்திர திலகரத்ன ஆகியோருக்கு தலா 20 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். கேப்டனும், துணை கேப்டனும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டதாகவும், கப்பலை முறையாக செலுத்த தவறியதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.
















## தினப்புயல் பத்திரிகையின் விலைமாற்றம்

**எமது தினப்புயல் பத்திரிகை கடந்த 09வருட காலங்களாக 30 ரூபாவிற்கு விற்கப்பட்டு வந்தது. தற்போதைய விலைவாசி மாற்றம் காரணமாக 10ரூபாவினால் அதிகரிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஆகவே 02.01.2022 இல் இருந்து எமது பத்திரிகை 40ரூபாவாக விற்கப்படும் என்பதனை எமது வர்த்தக, வாசக நெஞ்சங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். அத்தோடு எமது தினப்புயல் பத்திரிகைக்கு இது வரை காலமும் வழங்கிய ஆதரவுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு தொடர்ந்தும் உங்கள் ஆதரவினை எதிர்பார்க்கின்றோம்.**

**– நிர்வாகம் –**




**வவுனியா அபிஷா வைத்தியசாலையில் PCR பரிசோதனைகள் செய்து கொள்ளலாம்**




இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 02.01.2022 அன்று வெளியிடப்பட்டது.